
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7	இதழ்: 07	டிசம்பர் - 2025	விலை - ரூ.20/-
VOL:7	ISSUE: 07	December - 2025	Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-7 டிசம்பர்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

என்னிடம் சரணடைந்து விட்ட ஒருவர், தனது எதிர்காலத்தை பற்றியோ, தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலை பற்றியோ சிறிதளவும் கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் கடவுள் தன் அடியவர்கள் மீது தாய் போல அன்பு செலுத்துகிறார். தாயின் அன்புக்கு இணையானது ஏதுமில்லை அல்லவா?

வீண்கவலை எந்த விதத்திலும் பலன் தராது. மாறாக என் மீது நம்பிக்கை இல்லாமையையே அது காட்டுகிறது. நடப்பது எல்லாமே எனது விருப்பம். நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் கடவுள் நன்றாக அறிவார்.

அவருடைய பார்வையில் இருந்து யாரும் தப்ப முடியாது நீங்கள் வேண்டியதையெல்லாம் நான் தருவேன் என்பது தவறான கருத்து. உன்னுடைய கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் நான் அறிவேன். ஆனால் என் குழந்தை களுக்கு எது நன்மையோ அதை மட்டுமே நான் அளிப்பேன்.

கலங்காதிரு பயப்படாதே.

சில வாயிற் கதவை நான் திறந்தேன் உன் மனம் அதை ஏற்கவில்லை என்னை நோக்கி நீ வேண்டுதல் செய்யத் துவங்கிய நேரத்திலேயே உனக்கு பதில் தரும் வேலையை துவங்கி விட்டேன் என்பதையும், அதனால் தான் நீ சோதனைகளை அனுபவிக்கிறாய் என்பதையும் பலமுறை அறிவுறுத்தி வைத்திருக்கிறேன். இப்போது அதை நினைவு படுத்துகிறேன்.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் எண்பத்து ஒன்பதாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.



இம்மாத இதழை பாராயணப் பகலவன் திரு. சுந்தர் சாய்ராம், சாயிதாசன் திரு. கோபால், திரு. உதி மூர்த்தி ஆகியோர் இணைந்து வெளியிட, திருமதி. காயத்திரி அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள். விழாவில் ஏராளமான சாயிபக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில், திரு. சுந்தர்சாய், திரு. கோபால் திரு. உதி மூர்த்தி, திருமதி. ஜெயந்தி, திருமதி. காயத்திரி, திருமதி. தனம், திருமதி. சுகுணா, திருமதி. இந்துமதி, திருமதி. சரண்யா, திரு. பிரபு, திரு ராஜசேகர் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். நிகழ்ச்சியை திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் தொகுத்து வழங்க திரு.பாலாஜி அவர்கள் நன்றியுரை வழங்க விழா சிறப்பாக நிறைவடைந்தது.

சாய் தியானாலயா ஆத்மஞான குழுவின் அன்னதானக் குழுவினர் அனைத்து பக்தர்களுக்கும் சுவையான அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

இக்காலத்தில் பக்தி, சேவை, தியானம் உணர்வுள்ள மனிதர்களை விட தியாக உணர்வுள்ள மனிதர்களே தேவை. பக்தி, சேவை, தியானம் இவையெல்லாம்



முக்கியம்தான். அத்துடன் கூட பிறரின் துன்பங்களை துடைப்பது பற்றி மனிதன் சிந்திக்க வேண்டும். சமுதாயம் நலம் பெற வேண்டி செயல்படுவதற்கு மனிதன் ஆசைப்பட வேண்டும்.

உண்மையில் சமுதாயம் நலனை அடைய உழைப்பதற்கு மற்ற அனைவரையும்விட மருத்துவர்கள் தயாராக இருக்க வேண்டியது இக்காலகட்டத்தில் மிகவும் அவசியம். அவர்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கிறது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கில் வருமானம். இல்லை என்று கூறவில்லை. ஆனால் ஒரு ரூபாய் மதிப்புள்ள வேலையையாவது அவர்கள் செய்கிறார்களா? என்றால் அதுதான் இல்லை.

மக்களுக்கு சேவை செய்கின்ற எல்லா வேலைகளிலுமே பணிபுரிபவர்களுக்கு பணம் மட்டும்தான் தேவை. அதற்காக அவர்கள் உழைக்கத் தயாராக இல்லை. இக்காலத்தில் பணி செய்பவர்கள் தேவை. ஆனால் அவர்கள் சேவையுணர்வு இல்லாது வேலை செய்வதால் ஒரு பயனும் இல்லை. உண்மையான சேவகன்



தான் உண்மையான தலைவனாக மாற முடியும்.

சேவை உணர்வுடன் பணி செய்தால் தான் உலகத்துக்கு அவர்களால் உபகாரம் ஏற்படும்.



இல்லை என்றால் அவர்களுக்கு அறியாமலே அவர்களால் இந்த உலகு அழிவை நோக்கிச் செல்லும். எனவே சாயி பக்தர்கள் தாங்கள் பணிபுரியும் இடத்திலும், பணியிலும் முடிந்த அளவு சேவையுணர்வோடு பணியாற்றுங்கள். அதுவே நீங்கள் சாயிக்குச் செய்யும் சேவையாகும்.

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 85 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திருமதி. கோவிந்தம்மாள், விழுப்புரம். ரூ.500.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு.திலகம் கனி, போடிநாயக்கனூர்.ரூ.200
திரு. தியாகராஜன். சென்னை. ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திருமதி. காமாட்சி, தாம்பரம். ரூ.100.
திருமதி. பாரதி சாய், அயனாவரம். ரூ.100.
திரு. கண்ணன்சாய், வில்லிவாக்கம். ரூ.100
திருமதி. நிறைமதி, திருவள்ளூர். ரூ.100.
திரு. சாய் பாலு, பட்டாபிராம். ரூ.100.

தொடர் - 30

திருவருள் தேடி

குரு வாழ்க! குருவே துணை! சத்குருவே சகலம் சதா சர்வம் என்றுணர்ந்து, குருவடி போற்றி திருவடி வணங்குகிறேன். இந்த ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாத இதழில் நம் திருவருள் தேடி பயணத்தில் தொடர்ந்து நம்மை வழி நடத்தும் பிரபஞ்ச சக்தியான சாய் பகவான் நம்மை கருவியாக, இயக்கி அவர்தம் பக்தர்களின் இக வாழ்வில் அருள் புரிந்து இன்னல்கள் களைந்த அனுபவங்களை தொடர்ந்து பகிர்வோம் நண்பர்களே.


எனக்கு இப்பயணத்தில் பல சந்தர்ப்பங்களில் வழிகாட்டிய நெய்வேலி திரு. சந்தானம் அவர்கள் ஒரு மொபைல் நம்பரை பகிர்ந்து தொடர்பு கொள்ள சொன்னார். உடனே நானும் அவர்களை தொடர்புகொண்டு பேசி நமது சத்சரித பாராயண குழுவில் சேர விருப்பமா என்று கேட்டேன், அவர்கள் நங்கநல்லூரைச் சேர்ந்த கிருத்திகா, சுப்பிரமணியன் தம்பதிகள்.

சாய்ராம் நம்மை ஒருவரை நேரில் சென்று சந்திக்க உணர்த்தினால் நமக்கு ஒரு உயர்ந்த அனுபவம் காத்திருப்பது நிச்சயம். ஆம் கிருத்திகா ஒரு இளைய சகோதரியாக எம் வாழ்வில் நெருங்கி இன்று வரை நாங்கள் ஒரே குடும்பமாய் பழகி வருகிறோம். அவர் தீவிர சாய் பக்தர். ஆன்மீக சேவையில் தம்பதிகள் இருவரும் தங்களால் இயன்ற அளவுக்கும் மேல் ஈடுபடுகிறவர்கள். ஆனால் இதில் வியப்பு என்ன என்றால், உடல் நலக்குறைவு, பொருளாதார தேக்கம் என எதையும் பொருட்படுத்தாத தன்னலம் கருதா சேவர்கள்.



அவர்கள் சம்மதத்துடன் இந்த அனுபவங்களை முழுமையாக பகிர்கிறேன். கிருத்திகா விருப்பம் உள்ளவர்களுக்கு எல்லாம் ஸ்லோகம் சொல்லிக்கொடுப்பார். குரு மாமி என்ற மரியாதையுடன், பகவத் கீதா, நாராயணீயம், முகுந்த மாலா, லலிதா ஸஹஸ்ரநாமம்,

சுந்தர் சாய்
9789404451/9176182498



திரிசதி, சௌந்தர்ய லஹரி, அபிராமி அந்தாதி, என நீண்ட வரிசை. 40+ வயதில் வாரம் 2–3 முறை கிட்னி டயாலிசிஸ் வேறு. அவர் கணவர் LIC ஏஜென்ட்.

ஒரு தடவை சுப்பிரமணியன் பல்லவன் பஸ்சில் ஏறும் பொழுது கீழே விழுந்து மயங்கிவிட்டார். அதிர்ஷ்ட வசமாக பஸ் உடனே நிறுத்தப்பட்டு சக்கரத்தினின்று காப்பாற்றப்பட்டார். மயக்கத் திலிருந்த அவரை பின்னால் வந்த காரில் இருந்த மூன்று நபர்கள் உதவி செய்து காரில் வைத்து LIC ஆபீசிற்கு அழைத்து சென்று, மேஜையில் கிடைத்தி மார்பில் உதியை தடவி "இனி பயமில்லை" என்று சொல்லி, சென்று விட்டனர்.

வந்தது 3 பேர் வெள்ளை உடை யில். யார் எங்கிருந்து வந்தனர் என தெரியவில்லை. இதை ஒரு யதார்த்த நிகழ்வாக நாம் உணர வில்லை. உங்கள் நம்பிக்கை உங்கள் விருப்பம். இந்த சம்பவம் நடந்த பின்னரே நான் இவர்களை சந்திக் கிறேன்.

ஆனால் நாம் சந்தித்த பின்னர் அவர்கள் இல்லத்தில் ஓர் நாள் பாராயணம் செய்ய தொடங்கினோம். விஷ்ணு, லலிதா ஸஹஸ்ரநாம, சாய் நாமம்.

கிருத்திகா வின் இளைய சகோதரி ஸ்ரீ வித்யாவும் கிட்னி பிரச் சனையுடன் துபாய்ல வசித்து வந்தார். நாம் ஓர் முறை ஷீர்டில இருந்த போது கிருத்திகா பதட்டத்துடன் தொலைபேசியில் ஸ்ரீவித்யா மூச்சு திணறலுடன் அவசரமாய் தனியாக விமானத் தில் ஏறி வந்து சென்னை ஹாஸ்பிடளில் ICU வில் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் நாளைக்கு இருதய அறுவை சிகிச்சை என டாக்டர் சொல்வதை தெரிவித்து உடனே பாபாவின் உதவியை வேண்ட சொன்னார். நானும் சமாதி மந்திர், குருஸ்தான், துவாராகா மாயீ என மூன்று இடங்களில் பிரார்த்திக்கிறேன். பின்பு கவலை வேண்டாம் என தேற்றினேன்.

அடுத்த நாள் அவர்கள் என்னிடம் நடந்த விஷயத்தை வியப்புடனும் உணர்ச்சி மேலிட



விவரித்தனர். அன்று மாலை சுப்பிரமணியன் நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் சென்று அருகிலேயே உள்ள அவர்கள் வீட்டுக்கு திரும்பும் சமயம் அவரை பின் தொடர்ந்து ஒரு ஐந்து வயது பெண் குழந்தை அவர் வீட்டுக்குள் நுழைந்து மூச்சு வாங்க ஒரு பாட்டில் கொடுத்து. அங்கிள் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டதாம்.

ஒரு பாட்டில் தண்ணீர் முழுவதையும் கட கட வென குடித்ததையும், அழகான அச்சிறு பெண் குழந்தை தைரியமாக தனியே வந்ததையும் பார்த்து ஆச்சரியத்துடன் உன் பேர் என்று கேட்க, அக்குழந்தை "சாய் " என்று சொல்லிட்டு ஓடியே போய் விட்டதாம். மறு நாள் பயத்துடன் இவர்கள் ஹாஸ்பிடல் போனால். அங்கே ஸ்ரீவித்யா அமைதியாக படுக்கையில் நலமாக அமர்ந்து இருக்கிறார். ஓவர் நைட் அற்புத மாற்றம் ICU லேர்ந்து ஜெனரல் வார்டுக்கு மாற்றப்பட்டு மறுநாளே வீட்டுக்கு வந்துவிட்டார்! இதுவும் யதார்த்தமா?

நாமும் நமது நண்பர் திரு. ராஜகோபாலுடன் அடிக்கடி கிருத்திகா தம்பதி வீட்டுக்கு சென்று நலம் விசாரிப்பது வழக்கம். ஒவ்வொரு முறையும் டயாலிசிஸ் முடிந்து வீடு வரும்போது சக்தி இழந்து வருவதையும், கைகளில் நரம்புகள் வீங்கி இருப்பதையும் பார்க்க மனம் மிகவும் கலக்க மடையும். அவர்கள் இல்லத்தில் எந்த ஒரு குழப்பமோ, பிரச்சனையோ ஏற்படும் நேரத்தில் எல்லாம் நாம் முன் அறிவிப்பின்றி ஆஜர் ஆகிவிடுவதால் நம்மை "சாய்ராம்" என்று உணர்ந்து அன்போடு அழைப்பது இன்றளவும் வழக்கம்.

இறை அருளால் மாற்று கிட்னி கிடைத்து டிரான்ஸ்பிளான்ட் செய்ய ஹாஸ்பிடலில் ஆபரேஷன் முடிந்து, அடிக்கடி ஜுரம் வருவதைக்கண்டு நம்மை கவலை தொற்றிக்கொண்டது.

நாமும் மீண்டும் ஷீர்டி சென்ற பொழுது பாபாவின் சமாதியில் ஒரு வெள்ளை நிற ஷால் வாங்கி அர்ப்பணித்து அதை பிரசாதமாக கொண்டு வந்து கிருத்திகாவிடம் உதியுடன் சேர்ப்பித்து விடுமாறு வேண்டினோம்.

அவ்வளவு எளிதாக எதையும் வார்டு உள்ளே சேர்க்க அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் அதை பாபா பார்த்துக் கொண்டார். இதில் மகிமை என்னவென்றால்.. தாம் பூரண குணமாகி வந்தவுடன் பாபாவுக்கு ஒரு வெள்ளை நிற ஷால் வாங்கி சார்த்த வேண்டும் என்று ஏற்கனவே கிருத்திகா மனதில் ஆசைப்பட்டு, அதுவும் வெளியே சொல்லும் முன்னரே நிகழ்ந்து விட்டதை எண்ணி எண்ணி கண்ணீர் முட்டியது அந்த தூய ஆன்மாவிற்கு. அப்படி ஓர் ஆசீர்வாதம் பாபாவின் ஸ்பெஷலிட்டி.

பின்பு ஒருநாள் எனது 40 ஆண்டுகால நண்பர் ஒருவர் தான் வாழ்வின் விளிம்பில் இருப்பதாகவும், சொந்த பெற்றோரே கடுமையான மாந்த்ரீகம் செய்து தனது வாழ்வை நாசம் செய்வதாக உதவி கோரி என்னை அணுகினார். உடனே நானும், நமது ஸ்ரீராம் பாபா அவர்களும், அவர்களது இல்லத்திற்குச் சென்று கழிப்பு வேலையில் ஈடுபட்டு அவர்களை செய்வினைக் கோளாறுகளில் இருந்து பாபாவின் அருளால் விடுவித்தோம்.

ஆகையால் எனக்கு ஒரு தெய்வீக காப்பு தேவைப் பட்டதோ என்னவோ, கிருத்திகா குடும்பத்துடன் திட்டமிடாத பயணமாக வலுக்கட்டாயமாக சோட்டாணிக்கரை சென்று கிடைத்தற்கறிய குருதி பூஜையில் கலந்து கொள்ளவும் வாய்ப்பு கிட்டியது. ஆனால் ஸ்ரீராம் பாபாவுக்கு அதெல்லாம் தேவை இருக்கவில்லை.


இது குறித்து பின்னர் விவரமாக அறிந்துகொள்வோம். அவர்கள் இருவரும் நமது குருவை தேடி இதழ் வாசகர்கள், மேலும் ஆண்டு விழாவிலும் கலந்து கொண்டார்கள்.

2016 ஆம் ஆண்டு என ஞாபகம்.திரு. ஜோஷியிடமிருந்து ஓர் அழைப்பு நம்மை மிகவும் சந்தோஷத்தில் ஆழ்த்தியது. அவருடன் துணையாக ஓர் ஆன்மீக சுற்றுலா செல்ல வாய்ப்பு கிட்டியது. ஸ்ரீ தத்த ஸ்தலமான காணுகாபூர், அக்கல்கோட், குரவபூர் என தரிசனம் செய்தோம். 9 பேர் கொண்ட குழுவில் என்னுடன் சந்தானம், ஜோஷி, மஞ்சரி, ஆகியோரும் இருந்தனர். அப்பொழுது தான் எனக்கு மஞ்சரி அறிமுகம் கிடைத்தது.

அவர் தீவிர குருபக்தி பூஜை மற்றும் வழிபாடு முறைகள் பற்றி ஆர்வத்துடனும், விஷய ஞானத்துடனும் இருந்தார். கோவில்களில் எல்லாம் கூர்ந்து கவனித்து உணர்ந்து தர்சனம் செய்தார். நம்மோடு அவருக்கு வரும் கனவு பற்றி சில விவரங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அதைப்பற்றி எமது அபிப்ராயம் குறித்து கேட்க, நானும் இறைவன் தெரிவிக்கும் விஷயங்களுக்கு நேரம்

வரும்போது அவரே வழி காட்டுவார். அதுவரை பொறுமை காக்க என்றேன்.



பூமி தானம் செய்ய வேண்டும், அந்த இடத்தில் ஒரு தியான மண்டபம் அமைத்து வழிபாடு ஏற்பாடுகள் செய்ய உத்தேசம் இருப் பதாக தெரிவித்தார். அவர் அந்த காலகட்டத்தில் பாண்டிச்சேரியில் வாழ்ந்து வந்தார். அவரது குடும்ப சொத்தான நிலம் காஞ்சிபுரம், உத்திரமேரூர் சாலையில் உள்ள திருப்புலிவனம் என ப்படும் பழம்பெரும் சிம்ம தக்ஷிணாமூர்த்தி கோவில் அருகே இருந்தது.

எங்கள் பிரயாணம் முடிந்து நாங்கள் அலைபேசியில் தொடர்பில் இருந்தோம். ஒருமுறை மீண்டும் எங்கள் உரையாடலை ஞாபகம் செய்து எப்படி அதை செயல் படுத்தலாம் என ஆலோசனை கேட்டார், உடனே நானும் இன்றிலிருந்து தினம் 6 முறை ஹனுமன் சாலிசா பாராயணம் செய்து 18 நாட்கள் (108 முறை) முடிந்து பேசலாம் என தெரிவித்தேன்.


எதோ ஒரு யதார்த்தமான உள்ளுணர்வு வழி நடத்த இந்த ஆலோசனை சொன்னாலும், பின்னர் அது ஏன் நமக்கு உதித்தது என்று தெரியும்பொழுது, மிக மிக ஆச்சரியமாக இருந்து வேறு ஏதோ ஒரு சக்தி எங்களை வழி நடத்துவதை அறிந்து உணர்ச்சி வசமானோம். ஆமாம் அன்பர்களே! நீங்கள் இதை எப்படி உணர்கிறீர்கள் என்பதையும் அறிய ஆவல் தான்.

மீண்டும் தொடர்வோம். அடுத்த இதழில், புத்தம் புது ஆங்கிலப் புத்தாண்டு ஜனவரி 2026 வது இதழில். அனைவர்க்கும் சமர்த்த சத்குரு சாய் மஹாராஜ் திருவருள் பரிபூரணமாய் கிடைத்து எல்லா நலமும் வளமுடன் பெறுக என வாழ்த்தி, குரு வாழ்க, குருவே எல்லாம், எப்பொழுதும், எல்லோர்க்கும் துணை என்று அறிவோம்.

தொடரும்.

இராஜபுத்திரனுக்கு இளவரசி கதை ஒன்றை கூற ஆரம்பித்தாள்.

பலகாலங்களுக்கு முன்னர் மன்மதனை விட அழகுபொருந்திய ஓர் அரசன் இருந்தான். அவன் ரதியை ஒத்த அழகு பொருந்திய பெண்ணை திருமணம் செய்துகொண்டான். அவள் பேரழகின்மீது அவனுக்கு அவ்வளவு பிரியம், ஆசை. ஆனால் அந்த ராணிக்கோ அரசனின் வேலையாள் மீது மோகம் இருந்தது, அரசனையே வஞ்சனை செய்துகொண்டு இருந்தாள்.



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம்

ராணி மோகம் கொண்ட வேலையாளோ, அரசனுக்கு மயக்கத்தை உண்டு பண்ணும் வகையில் தினமும் மதுபானத்தை அரசனுக்கு ஊற்றிக் கொடுத்து அவனது அந்தப்புரத்திற்கு தாசியை அனுப்பி வைத்தான். அரசன் மதிமயக்கத்தால் தாசியோடு மகிழ்ந்து தன் மனைவியை போன்று உலகில் எவருமிலர் என்ற நிலையிலிருந்தான். இந்த நேரத்தில் வேலையாளோ ராணியோடு சேர்ந்திருந்து மகிழ்ச்சியாகக் காலத்தை கழித்துவந்தான்.



நாராயணன்

ஒருநாள் அவசரவேலை நிமித்தமாக அரசனின் வேலையாள் மதுபானத்தை வைக்கமறந்து வெளியே சென்றுவிட்டான். அந்த நேரத்தில் அரசன் போதையற்ற நிலையில் தன் அந்தப்புரத்திற்குச் சென்று ராணியைபார்த்து மகிழ்ச்சியாக இருக்க எண்ணம் கொண்டு உள்ளே சென்றான். உள்ளே சென்ற அரசன், காம வேட்கையினால் ராணி என்றெண்ணி தாசியோடு கூடி மகிழ்ந்தான்.

சற்றுநேரம் சென்றபின்னர் தன்னிலைக்கு வந்த அரசன் தாசியை கண்டு கடும்கோபமுற்று, யார் நீ? இங்கு எப்படி அந்தபுரத்தினுள் நுழைந்தாய்? அரசியார் எங்கே? என்றான். தாசி அமைதிகாத்தாள், இதைக்கண்ட அரசனுக்கோ கோபம் உச்சத்தை அடைந்து தன் உடைவாளை எடுத்து தாசியை கொல்லமுற்பட்டான். இதைக் கண்டு அஞ்சிய தாசி தன் உயிரை காத்துக்கொள்ள வேறுவழி யில்லாமல் நடந்த விஷயங்களையும் அரசனுக்கு உரைத்தாள். அதுமட்டுமல்லாமல் ராணியும், வேலைக்காரனும் சேர்ந்திருக்கும் இடத்தையும் அரசனுக்கு காட்டினாள் தாசி.

நடந்தவையனைத்தையும் தாசியின் மூலமாக கேட்டறிந்த அரசன் மிகவும் கலக்கமுற்றான். தன்னையே நொந்துகொண்டான், ராணியை போன்று ஒருவரும் இலர் என்றெண்ணியிருந்து ஏமாந்தேனே! என்னே எந்தன் மூடத்தனம். இவளையின்றி வேறொ ருவர் இல்லை, பாக்கியவான் என் றெல்லாம் எண்ணியிருந்தேனே! அனைத்தும் வீணாயிற்றே.

மதிமயக்கத்தால், போதையின் உச்சத்தால் சேரக்கூடாத தாசி யோடு கூடி பெருந்தவறு புரிந்தேன். அழகியவதனனாகிய என்னைவிட அந்த வேலைக்காரனிடம் என்ன அழகை கண்டாள்? அவனோ பார்ப்பதற்கு விகாரமாகவும், நிறம் குன்றியும் அல்லவோ காணப்படுகின்றான் இந்த ராணி என்னை வஞ் சித்து வேலைக்காரனோடு சேர்ந்தாளே! இதை அறியாத நான் எப்படிப்பட்ட மூடன். அவளது அழகில் மயங்கி பைத்தியமாகவே இருந்தேனே. இவையாவும் பெண்ணாசையால்தானே நடந்தேறியது, காலத்தை கடத்தி பெருந்தவறிழைத்து விட்டேன்.

காலத்தில் கற்றுணரவேண்டி யதை அறியாமல் இந்திரியசுகத் துக்கும், புறஅழகுக்கும் என்னைக் கொடுத்து முட்டாளாக இருந்துவிட்டேன், இனியும் காலம் தாமதிக்கலாகாது என்றுசொல்லி வைராக்கிய மனதோடு தன்மனதை ஞானமார்க்கத்தில் செலுத்த திண்ணம் கொண்டான்.

அந்தநேரத்தில் ஒரு அவதூத முனிவர் ஆனந்தமாக அவனை கடந்து செல்வதைக் கண்டு, அவரின் சந்தோஷ பயணத்தைப் பார்த்து, பணிவோடு அவரை நோக்கி, “பார்ப்பதற்கு சாதுவைப் போல காணப்படுகின்றீர், உடுத்த கோவணத்தை தவிர வேறொன்றும் காணோம்! இருந்தும் எப்படி இந்த ஆனந்தம்“ என்றான் அரசன்.



அதற்கு அவதூதர், "அரசனே! நான் அறியவேண்டியவற்றை அறிந்து கொண்டேன், தேவையற்றவைகளை ஒதுக்கிக்கொண்டேன், மூச்சுக் காற்றை முறைப்படுத்தி இந்திரியங் களை ஆண்டதால் மனது அடங்கியது.

அடங்கிய மனமானது, தவத்தில் ஆழ்ந்து தியானத்தில் லயித்து இந்த சந்தோஷமே என் இயல்பாகமாறியது. நீயும் காலத்தை கடத்தாமல் தியானம் மேற்கோள்! மூச்சையடக்கி மனதை அடங்கச்செய்" என்றார் அவதூதர். அவர் கூறியபடியே, மோகத்தை துறந்து மெய்ஞ்ஞானத்தை அடைந்தான் அரசன்.

ஹே இராஜகுமாரரே! பார்த்தீரா அழகில் என்னயிருக்கிறது? இது மனதுதரும் கற்பனையின்றி வேறில்லை. மதுவினால் மதிமயங் கியவன் ஒரு தாசியைக்கூட கண்டுகொள்ளமுடியவில்லை, மனைவியே சுகம் என்றிருந்தவன்

தாசியோடு கூடினான். ராணியோ அழகில் குறைந்த வேலைக் காரனோடு சேர்த்தாள். இதனால் அழகு, அந்தஸ்து, பிரியம், அப்பிரியம், விருப்பு, வெறுப்பு இந்த இருமைகளெல்லாம் மனதுசார்ந்த விஷயங்களேயன்றி வேறொன்றுமில்லை.

இப்பொழுது, தங்களுக்கு புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்! இவையெல்லாம், மனதில்தோன்றும் ஆசையினால் எண்ணங்களாக பதிக்கப்பட்டு இந்திரியங்களினால் தூண்டப்பட்ட செயல்களே. மனதிற்கு பிடித்துவிட்டால் அசிங்கம்கூட அழகாய் தோன்றும். எத்தனையோ தேசங்களில், கையில்லாதவர், குட்டையானவர், விகார முகமுடையவர், பெருத்தமூக்கினன், வழுக்கை தலையர்கள் என எத்தனை மனிதர்கள்.

அவர்களெல்லாம் ரதிசுகத்தை அடைவதில்லையா? அவர்களும் தத்தம் துணையோடு மகிழ்ச்சியில்தானே ஈடுபடுகின்றனர். இதிலிருந்து ஆசை, பிரியம் யாவும் மனம் சம்பந்தப்பட்ட பதிவுகளே என்பது உறுதியாகிறது. அதை நீங்கள் மேற்சொன்ன கதையினில் காணவில்லையா! இதற்கு மூலகாரம் ஆசை,

ஆசையே சிந்தனையை தூண்டி மனதில் எண்ணத்தை பதியவைத்து அடிக்கடி சிந்தனை செய்யவைக்கிறது. இந்த சிந்தனையானது குழந்தைகளுக்கும், யோகிகளுக்கும், சித்தர்களுக்கும் உண்டாவதில்லை. ஏனென்றால், யோகிகளும், சித்தர்களும் மெய்ஞானத்தால் உண்மைதனை உணர்ந்தனர் அதனால் மயக்கமேயில்லை. குழந்தைகளுக்கு ஏதுமறியாத நிலை, அதனால் பாதகமில்லை.

என்பிரிய இராஜகுமாரரே! உதிரத்தால் நிரப்பப்பட்ட சதைபிண்டமே இந்த உடம்பு, நீங்கள் போற்றிப்புகழ்ந்து ஆராதிக்கும் இந்த தங்கப்பதுமையான பெண்ணின் உடலை ஆராய்ந்து பார்த்தால் அதனுள் அருவருக்கத்தக்க விஷயங்களே அதிகமுள்ளது. அதில் உங்களுக்கு எது பிரியம், எது பிரியமில்லை சொல்லுங்கள்? இரத்தம், எலும்பு, மலம், மூத்திரம் என நாற்றமெடுத்ததே இந்த திருமேனி! இந்த உடம்பை வைத்துக்கொண்டு ஆன்மபலத்தை கூட்டுவதன்மூலமே மேன்மையடையமுடியும்.

அறுசுவை உணவுகூட காலத்தின் கோலத்தால் கழிவுப்பொருளாக மாறி விடுகின்றது, பின்பு இந்த உடம்பைப்பற்றி என்ன சொல்ல! எது உங்களுக்கு பிரியமாக தோன்றுகிறதோ அதை விவேக புத்தியினால் விசாரித்து உணரவேண்டும். இந்த இளமையும் காலத்தின் கட்டாயத்தால் மாறிப் போகும், ஆதலின் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பதற் கிணங்க நேரத்தை வீணடிக்காமல் ஞானத்தையடைய முற்படுங்கள் என்றாள் ஹேமலேகை.

இந்தவிதமாக ஹேமலேகை கூறிய வார்த்தைகளைக்கேட்ட ஹேமசூடன், போகத்தின்மேலே வைராக்கியம் வந்தவனாக, அவள் கூறிய விஷயங்களை எண்ணி ஆச்சர்யமுற்றான். மீண்டும் மீண்டும் அவள் கூறிய

வார்த்தைகளை விசாரணைசெய்து போகங்களின் மீது பற்றறுத்தவனாக ஞானமார்க்கத்திற்கு பயணப்பட்டான். ஹேமலேகையிடமிருந்து படிப்படியாக தத்துவ போதமடைந்து, மௌனத்தில் ஆழ்ந்து தவத்தில் தன் மனதை திருப்பினான்.

பின்னர், மணிசூடனுக்கு, ஹேமசூடன் இதே ஞானத்தை கற்பித்தான், முக்தாசூடன் தன் மகனிடமிருந்தும், மகாராணி தன் மருமகள் ஹேமலேகையிடமிருந்து இந்த தவத்தை அறிந்து தியானத்தில் மனதை செலுத்தி அனைவரும் நித்திய பேரின்பத்தில் திளைத்தனர். இதேபோன்று, அந்த ஊரே ஞானமார்க்கத்தில் பயணித்து பின்னர் நாடெங்கும் மக்கள் அனைவரும் ஞானத்தையடைந்து அமைதியுற்றனர். இப்படிப்பட்ட உயர்ந்த ஞானமே மெய்ஞ்ஞானம் என்று குருநாதர் தன் சிஷ்யனுக்கு உணர்த்தினார்.

சிஷ்யனே, ஹேமலேகை என்ற ஒருத்தியால் அந்த நாடே ஞான மார்க்கத்தை அடைந்தது. இதுவே சாதுசங்கத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டு, நாம் எங்கு லயிக்கிறோமோ அதையேபற்றி இறுதியில் நாம் அதுவாகவே மாறிவிடுவோம் என்று குருநாதர் சிஷ்யனுக்கு உரைத்தார்.

தொடரும்

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.10.25

காணப்படுவது சத்தியமன்று, காண்பதுவே சத்தியம். காண்பவன் இல்லை என்றால் காணப்படும் பொருள் ஏது? எனவே காண்பது எதுவோ அதுவே மெய்ப் பொருள்.

02.10.25

கோபம், பொறாமை, காமம் போன்ற தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த தங்கமாக மாற்றும் ரசவாதமே குண்டலினி என்னும் தியானப் பயிற்சி.

03.10.25

காலையில் விடிவதும், பின்பு மாலையில் முடிவதும் போல விழாக்கள் வரும், போகும். அதை சாட்சியாக இருந்து கவனியுங்கள் அதில் விழுந்து விடாதீர்கள். விழாமல் இருப்பதே "விழா"

04.10.25

பக்தி என்பது, சடங்கு, மற்றும், சம்பிரதாயங்கள் செய்வதல்ல. இறைவனுடைய கட்டளைக்கு கீழ்படிந்து எவன் ஒருவன் வேதனையிலும், சந்தோசத்திலும், கடவுளை முழு மனதாக வணங்குகிறானோ அங்குதான் முழுமையான பக்தி உள்ளது.

05.10.25

இந்த உலகில் எல்லாம் கிடைக்கின்றன என்பதற்காக அனைத்தையும் அனுபவிக்க முடியுமா? எதை அனுபவித்தாலும் அதன் விளைவுகளை அனுபவிக்க தயாராக இருந்தால் அனுபவிக்கலாம்.

06.10.25

இந்த உடம்பு என்பது உனக்கு தரப்பட்டிருக்கும் "வாடகை வீடு" அதன் உரிமையாளர் கடவுள். அவர் விரும்பும் வரை நீ அதில் வசிக்கலாம். நம்பிக்கை, பக்தி, என்ற வாடகையை செலுத்துவதன்

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

மூலமாக கடவுளுக்கு நன்றி கூறிய படி வசிப்போமாக!

07.10.25

அனைத்து செல்வத்திற்கும் இருப்பிடமான இறைவனுக்கு நீ கொடுக்கும் அற்பமான காணிக்கை தேவைதானா? கடவுள் பெரிதான ஒன்றைக் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பில் சிறிதான ஒன்றைக் கொடுப்பது மூடத்தனமான செயல் அல்லவா?

08.10.25

பொய் கூறுவது மிகவும் சிரம மான காரியம். ஒரு பொய்யை மறைக்க பல பொய்கள் பேச வேண்டியதிருக்கும். உண்மை அப்படி அல்ல. உண்மை பேசுவது மிகவும் எளிதானது. ஆகையால் தான் நம் முன்னோர்கள். சத்தியத்தையே பேசு! என்று கூறிச்சென்றனர்.

09.10.25

அன்பிற்கினியவர்களே! நம் மிடம் குரு என்ற கற்பக விருட்சம் இருக்கும் போது ஏன் அற்பமான பொருட்களுக்கு ஆசைப்பட வேண்டும். எல்லாவற்றையும் தருவதற்கு குரு என்ற ஒருவர் இருக்கும் போது, ஒரு துரும்பைக்கூட தர மனம் இல்லாதவர்களிடம் நாம் ஏன் இறைஞ்ச வேண்டும்.

10.10.25

ஆன்மீகப் பயிற்சிக்கு எப்போதும் மகிழ்ச்சியுடனும், சிரித்த முகத்துடனும் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அது மற்றவர்களிடம் இருந்து உங்களை பிரித்து காட்டும். எனவே, சுத்தமான மனதுடனும், பணிவுடனும், அகந்தை இல்லாமலும் இருங்கள்.

11.10.25

'ஓ... இயற்கையே... வெற்றி களையே கொடுத்து என்னை கோழை யாக்கி விடாதே!' 'தோல்விகளை தாங்கும் மனப்பக்குவத்தையும் தா...!'

12.10.25

எவரொருவர் குருவை அடைந்து அவரையே இடையறா பக்தியோடு ஆராதிக்கின்றாரோ, அவருடைய நலத்தையும், ஆரோக்கியத்தையும், குருவே உறுதி செய்கிறார். யார் எங்கிருந்தாலும் அவர்களை பாதுகாத்து நெறிப்படுத்த குரு இருக்கிறார். எனவே பயம் எதற்கு?

13.10.25

மக்கள் தியானம், பஜனை, சத்சங்கம், இராமாயணம், மகா பாரதம், போன்ற புனித நூல்களை படித்தும் ஏன் அவர்களிடம் தெய்வீக சக்தி வெளிப்படவில்லை. காரணம். அவர்களுடைய மனம் உலகப் பொருட்களில் அழுந் திக் கிடப்பதால்தான். உலகப் பொருட்கள் மீது பற்றிமையே தெய் வீகத்தன்மையை வெளிப்படுத்தும்

14.10.25

ஆன்மீகம் என்றால் தனிமை யாக துணையின்றி துறவு வாழ்க்கை நடத்துவது என்று பொருளல்ல. மனித சமுதாயம் முழுமையும் ஒரே குடும்பமாகக் கருதி பலவகையில் ஒருமையை அறிந்துணர்வதே ஆன்மீகம்.

15.10.25

பரம்பொருள் அசைவற்றது. ஜீவன் அசைந்து கொண்டே இருப்பது. உலகியல் பொருட்கள் என்ற "அசைவே" "ஆசை" என்ற உடலை இயக்குகிறது. ஆசை என்ற உடல் அசையும் வரை அசை வற்ற பரம்பொருளை ஒருபோதும் காண இயலாது. எனவே *அசைவை நிறுத்துங்கள் ஆனந்தம் வெளிப்படும்*

16.10.25

அடுத்தவர் நம்பிக்கையை குலைப்பதும், உங்கள் நம்பிக்கையை குழப்பிக் கொள்வதும், இரண்டும் தவறே!

17.10.25

குருவைத் தவிர வேறெவருக்கும் இம் மனிதவுடலுக்கு நற்கதியளிப் பது எப்படி என்பது தெரியாது. குரு தமது கரங்களால் தொடுவதால் தான் ஜடம் போன்ற மனிதர்கள் மேலெழுப்பப் படுகிறார்கள்.

18.10.25

அமைதியும், ஆனந்தமும் நமது உள்ளத்தை சார்ந்துள்ளதே அன்றி, வெளியில் இல்லை. ஒவ்வொரு உயிரும், அடிப்படையில் தெய்வீக மானதே! எந்த அளவிற்கு ஒருவர் சத்யம்,தர்மம், அன்பை வெளிப் படுத்துகின்றார்களோ, அந்த அளவிற்கு அவரால் ஆனந்தத்தை, பெறவும், தரவும் முடியும்.

19.10.25

உங்களுக்கு விருப்பம் இல்லாத வேலையாக இருந்தாலும், முழு ஈடுபாட்டுடன் செய்யுங்கள். ஏனெனில் அவை உங்களை நம்பி கொடுக்கப்பட்டது. எந்த வேலைக்கும் நம்பிக்கை துரோகம் இழைக்காதீர்கள். கிடைத்த வேலைக்கு நன்றியோடு இருங்கள். வெற்றி ஒருநாள் உங்கள் காலடியில் நிற்கும்.

20.10.25

இவ்வுலகில் உள்ள அனைத் துப் பொருட்களும், 'இறைவ னுக்குச் சொந்தமானவை.' எல்லாவற்றையும் அனுபவித்துக் கொள்ளுங்கள். ஆனால் எதன் மீதும் 'பற்று வைக்காதீர்கள்.'

21.10.25

இறைவனோடு தொடர்பு கொண்டு அவரின் அருகே நீங்கள் இருக்கும் போது மாயையால் உங்களை ஒன்று செய்ய முடியாது. அதேபோல் மாயையுடன் தொடர்பு கொண்டு அதன் மயக் கத்தில் நீங்கள் இருக்கும் போது இறைவனால் ஒன்றும் செய்ய இயலாது.

22.10.25

ஒவ்வொரு செயலை செய்வதற்கு முன்னால் ஒரு நிமிடமாவது யோசித்து செய்ய வேண்டும். செய்த பின்பு யோசிப்பதில் பயன் இல்லை. இறைவனை நண்பனாக அடைய விரும்புகிறவர் ஒவ்வொரு செயலையும் முன்கூட்டிச் சிந்திக் கவும், அகப் பரிசோதனை செய்ய வும் பழகிக்கொள்ள வேண்டும்.

23.10.25

ஆன்மீக பாதையில் முதல்படி, காமம்,பேராசை, வெறுப்பு,

பெருமை போன்றவைகளை நீக்குவதே! அதன் மூலம் உங்கள் இதயத்தோட்டத்தில் மண்டியுள்ள களைச் செடிகளை களைந்து நிலத்தை சுத்தம் செய்து அன்பு எனும் நறுமணச் செடிகளை நடுங்கள். நல்லொழுக்கம் என்னும் இனிய பழங்கள் விரைவில் கிடைக்கும்.

24.10.25

இறைவனுடன் ஒன்றுவதற்கும், உடலை நோயின்றி வைத்துக் கொள்வதற்கும், முக்கிய வழி 'நாக்கு கட்டுப்பாடாகும்' "நாக்கு" உண்பது, உரைப்பது இரண்டிலும் தொடர்புடையது "நாக்கு கட்டுப்பாடு" இல்லாது பக்தி வழியில் செல்லவும், உடலை பாதுகாப்பதற்கும் இயலாது.

25.10.25

எண்ணத்தின் மலரே செயல். இன்பமும் துன்பமும், அதன் கனிகள். எண்ணங்களை சீரமைப்போம் இனிய வாழ்வைப் பெறுவோம்.

26.10.25

இறைவனை, உலகியல் பொருட்களோடு சம்பந்தப்படுத்தி பார்ப்பதை விட்டு விட்டு, உலகியல் பொருட்கள் அனைத்தையுமே இறைவனாகப் பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதுவே உண்மையான பக்தி!

27.10.25

உங்களுக்கு உண்மையான மகிழ்ச்சி வேண்டுமாயின் இறைவன் மீது நீங்கள் அன்பு காட்ட வேண்டும். உங்கள் உடல் மீது பற்று கொள்ளாதீர்கள். இறைவன் மீது பற்று கொண்டீர்களேயானால் மகிழ்ச்சியை நீங்கள் வெளியே தேட வேண்டியிருக்காது.

28.10.25

மனித மனம் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலர் போன்றது. அதன் ஒவ்வொரு இதழும் உலக மாயைகளுக்கு ஆசைப்பட்டு அடிமையாக செல்ல விரும்பும். நீங்கள் தான் அதனை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நல்ல மனம் கூட வீணாகப்போய்விடும்.

29.10.25

தனக்குரிய தர்மத்தை செய்து வரும் ஒருவனைவிட, கோடி மடங்கு உயர்ந்தவன், வீட்டைத்துறந்தவன். அவனைவிட கோடி மடங்கு உயர்ந்தவன் உள்ளத்திலே துறவு கொண்டவன்

30.10.25

ஒரு சாதகன் இறைவனை அடைய மெய்ஞானப் பாதையை தேர்ந்தெடுக்கும் போது, அவனின் முன்வினைக் கருமங்கள் தானாகவே விலகிப்போகின்றன. அதற்கு சாதகனின் முழுமையான சரணாகதியும், குருவின் ஆசியுமே காரணமாகும்

31.10.25

ஒரு யோகி நாளை நடப்பதை நன்கு அறிகின்றான். ஆனால் அதை அறியாததைப் போல் கடக்கும் போதுதான் ஞானியாகின்றான். ●

நினைவாற்றலை அதிகரிக்கும் ரோஸ்மெரி

ஒரு தாவரத்தின் வாசனை நம் மூளை நினைவாற்றலை 75% வரை உயர்த்த முடியும் என்று நீங்கள் நம்புவீர்களா? ஆம்! நம் சமையலறையில், சில நேரங்களில் அலங்காரத் தாவரமாக காணப் படும் ரோஸ்மெரி எனும் இந்த அற்புத மூலிகை தான் அந்த அதிசயத்தைச் செய்கிறது.

ரோஸ்மெரியின் வாசனை நம் மூளையின் நரம்பு செல்களுக்குள் உள்ள தொடர்பை (brain cell communication) பல மடங்கு வேக மாக்குகிறது. அதாவது, நம் நினை வகத்தை மேம்படுத்தி, சிந்தனைத் திறனை கூர்மையாக்கி, கவனத்தை நிலைப்படுத்துகிறது. அது நம் மூளையின் அசெடில் கோலின் (Acetylcholine) எனும் நரம்பு ஊட்டச் சத்தினை தூண்டுகிறது. இதுவே நினைவாற்றலுக்கும் கவனத்துக்கும் முக்கியமான இரசாயனம்.

பிரிட்டிஷ் நார்த்தம்பிரியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஒரு ஆய்வில், ரோஸ்மெரி வாசனையை தினமும் சில நிமிடங்கள் சுவாசித்தவர்களின் நினைவாற்றல் 75% வரை உயர்ந்தது என உறுதியாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அந்த வாசனை யில் உள்ள முக்கிய இரசாயனம் 1,8-cineole ஆகும். இது மூளையின் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தி, நரம்பு செல்களுக்கு இடையேயான தகவல் பரி மாற்றத்தை வேகப் படுத்துகிறது.

ஆயுர்வேதம் இந்த ரோஸ்மெரியை "மெத்ய ரசாயனம் (MedhyaRasayana)" என அழைக்கிறது. அதாவது, இது நினைவாற்றலையும் அறிவுத்திறனையும் மீட்டெடுக்கும் மூலிகை. இது வாத தோஷத்தை சமநிலைப்படுத்தி, மூளையின் அக்னியை தூண்டுகிறது.

இதனால் மன அழுத்தம் குறைந்து, உற்சாகம், கவனம், தெளிவு அனைத்தும் இயற்கையாக உயரும்.

ஒரு சிறிய ரோஸ்மெரி தாவ ரத்தை வீட்டில் வளர்த்து, காலை, மாலை நேரங்களில் அதன் இலை களை நசுக்கி ஆழமாக மூச்சு இழுத்து சுவாசியுங்கள். ஒரு வாரத்திற்குள் மூளையின் மங்கலான மேகம் அகன்று, சிந்தனை தெளிவாகி, மன உற்சாகம் அதிகரித்திருப்பதை உணரலாம்.

ரோஸ்மேரியின் வாசனை மூளையின் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது. மன அழுத்தம், மனச்சோர்வை குறைக்கிறது மூளை வயதாவதை தாமதப்படுத்துகிறது உடல் ஆற்றலை தூண்டுகிறது ஹார்மோன்களை சமநிலைப் படுத்துகிறது நோய் எதிர்ப்பு சக்தியை உயர்த்துகிறது

1. ரோஸ்மெரி வாசனை பரப்பி (Diffuser) – தினமும் காலை ஒரு சில துளிகள் ரோஸ்மெரி எண்ணெயை நீரில் சேர்த்து வாசனை பரப்புங்கள்.



2. ரோஸ்மெரி தேநீர் – 1 tsp உலர்ந்த ரோஸ்மெரி இலைகளை வெந்நீரில் ஊறவைத்து குடிக்கலாம். இது நரம்பு அமைதியை தரும்.

3. ரோஸ்மெரி மசாஜ் எண்ணெய் ரோஸ்மெரி எண்ணெயை தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தடவுங்கள். இதனால் இரத்த ஓட்டம் மேம்பட்டு மன தெளிவு கிடைக்கும்.

4. பயிற்சி நேர வாசனை, மாணவர்கள், தொழில்முனைவோர், எழுத்தாளர்கள் படிக்கும் நேரத்தில் ரோஸ்மெரி வாசனை பயன்படுத்தினால் நினைவாற்றல் கூடியிருக்கும்.

மூளை என்பது ஒரு புனித கோயில்.

அதை தூய்மையான வாசனைகள், நறுமணம், புனித எண்ணங்கள் மூலமே காப்பாற்றலாம். ரோஸ்மெரி வாசனை பிராண சக்தியை (Life force) தூண்டி, அஜ்ஞா சக்ராவை (Third Eye Chakra) செயல்படுத்துகிறது. இதனால் உள்ளுணர்வு (intuition) அதிகரித்து, நம்பிக்கையும் ஆழமானதாகிறது.

இது ஒரு சாதாரண தாவரம் அல்ல; இது மன யோக மூலிகை. நீங்கள் மனஅழுத்தத்தால் சோர்ந்து போனாலும், ரோஸ்மெரி வாசனை உங்களை உடனே புத்துணர்ச்சியாக்கும். புராதன ரோமர்கள் மாணவர்களுக்கு தேர்வுக்கு முன் ரோஸ்மெரி மாலையை அணிவித்து ஆசீர்வதித்தனர். காரணம்? அது மன தெளிவையும், தைரியத்தையும் அளிக்கிறது.

ஒரு நிமிடம் மூச்சை ஆழமாக இழுத்து ரோஸ்மெரியின் வாசனையை உணருங்கள். அது உங்கள் மூளையின் ஒவ்வொரு நரம்பிலும் ஒரு புதிய ஒளியை ஏற்றும். அது உங்கள் நினைவகத்தை தூய்மைப்படுத்தும்.அது உங்கள் சிந்தனையை தெய்வீகமாக்கும்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

பயணக்கட்டுரை



சிவலிங்கத்திற்குள் கயிலாயம்

கேரளாவின் திருவனந்தபுரம் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையிலும் அமைந்துள்ள செங்கல் மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோவிலுக்கு சமீபத்தில் சென்றிருந்தேன். அக்கோவில் "அகம் ப்ரம்மாஸ்மி" யை விளக்கும் வகையில் சிறப்புற அமைந்திருப்பதைக் கண்டு மிகவும் வியந்து போனேன்.


திருவனந்தபுரம் ரயில் நிலையத்திலிருந்து 35 மைல் தொலைவில் செங்கல் என்ற அழகான சிற்றூரில் அமைந்துள்ளது இக்கோயில். கேரள புராதன கட்டுமான அமைப்பை கொண்ட இக்கோவிலின் சிறப்பே உலகின் மிக உயரமான சிவலிங்கம் தான். பல சாதனைகள் படைத்த சிவலிங்கம் பார்க்க பிரம்மாண்டமாய், மிக அழகான இயற்கை சூழலுடன் அமைந்திருக்கின்றது.

சிவலிங்கத்தின் உள்ளே சென்று பார்வையிட 200 ரூபாய் அனுமதி கட்டணம் செலுத்த வேண்டும். உள்ளே சென்று 108 சிவலிங்க தரிசனம், வைகுண்டம் தரிசனம், கைலாய தரிசனம் செய்யலாம். மிக அற்புதமான "அகம் ப்ரம்மாஸ்மி" என்ற தத்துவ விளக்கத்தை உள்ளே சென்று உணரலாம் என்றார்கள்.

111.2 அடி உயரம் கொண்ட உலகின் மிக உயரமான சிவலிங்கம் என்ற பெருமையை க்கொண்ட சிவலிங்கத்தின் உள்ளே பயணிக்க தயாரானோம். உடன் கோயில் அர்ச்சகர் ஒருவர் வழிகாட்டியாக உடன் வருகிறார். அனைத்து மொழிகளிலும் வழிகாட்டி இருப்பது மிகவும் சிறப்பு.

காசி, கங்கோத்ரி, ரிஷிகேஷ், ராமேஸ்வரம், தனுஷ்கோடி, பத்ரிநாத், கோமுக் மற்றும் கைலாஷ் போன்ற பல்வேறு புனித தலங்களிலிருந்து தண்ணீர், மணல் மற்றும் மண் ஆகியவை கலந்து கட்டப்பட்ட செங்கல் மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலின் சிவலிங்கம் ஒரு 'தெய்வீக அமைப்பு' என்று கூறப்படுகிறது.





திருமதி. சாந்தி வெங்கடாச்சலம்

சிவலிங்கத்தின் உட்பகுதி குகை வடிவில் எட்டு தளத்தில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு தளத்தின் வாயிலிலும் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், வியாச மகரிஷி, கால பைரவர், காஷ்யப மகரிஷி, அத்ரி மகரிஷி, ஜமதக்னி மகரிஷி, பரத்வாஜ முனிவர், அகத்தியர், வசிஸ்டர், கௌதம மகரிஷி, பிருகு மகரிஷி, விஸ்வாமித்திரர், பரசுராமர் மற்றும் பாஸ்கராச்சார்யா ஆகியோரின் சிற்பங்கள் தவக்கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தளமும் குகை அமைப்பில், வட்ட வடிவில், மிதமான வெளிச்சத்தில், படிக்கட்டுகளுடன் தரிசிப்பதற்கு மிக எளிதாக இருந்தது. மிக மெலிதாய் பஞ்சாட்சர சுலோகம் ஒலித்துக் கொண்டிருந்தது. முதல் தளம் சென்றதும் வழிகாட்டி விளக்க ஆரம்பித்தார்.

இந்த அமைப்பு 8 தளங்களைக் கொண்டுள்ளது, அவற்றில் ஏழு தளங்கள் மனித உடலில் உள்ள ஏழு சக்கரங்கள் அல்லது ஆற்றல் மையங்களைக் குறிக்கின்றன எனவும் இமயமலையின் ஏழு மலைகளைக் குறிக்கும் வகையிலும் கட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

ஒவ்வொரு தளமும் 14 அடி உயரம் இருக்கும். சுவற்றில் சிவ அவதாரங்கள் சுதை சிற்பங்களாக பெயர் பலகையுடன் 8 அடி உயரத்தில் பிரமிப்பை உண்டாக்குகிறது. சுற்றி 18 சிவலிங்கம்

வட்டவடிவில் நடுவில் முதல் சக்ரம் மூலாதாரம் பற்றிய அமைப்பு, அதன் நிறம், அதற்கான இறை மூலம், மூலாதாரத்தில் நம்மை நிலை நிறுத்தினால் ஏற்படும் நன்மை கள், தீரும் நோய்கள் என்று அனைத் தையும் வழிகாட்டி விளக்குகிறார்.

இதே போல அடுத்தடுத்து தளங் களுக்கும் சென்று நம் உடலில் உள்ள 7 சக்ராகளையும் அவை செயல்படும் விதத்தையும் அதனால் மனித குலத்திற்கு கிடைக்கும் பலன்களையும் விளக்கி கூறுகிறார்.

அதாவது நம் உடலில் உள்ள மூலாதாரம் (சிவப்பு), சுவா திஷ்டானம் (ஆரஞ்சு), மணிபூரகம் (மஞ்சள்), அனாஹதம் (பச்சை), விசுத்தம் (நீலம்), ஆக்கினை (இண்டிகோ) மற்றும் இறுதியாக சஹஸ்ராரம் (ஊதா) ஆகிய 7 சக்கரங் களும் சிற்பங்களாக கண் முன்னே காண முடிந்தது புது அனுபவம்.

108 சிவலிங்கங்களையும் 64 சிவன் அவதாரங்களையும் தரிசித்து விட்டு இறுதியாக மிக உயர்ந்த தளத்தில், ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை மலரின் கீழ் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் மற்றும் பார்வதியின் பனி மூடிய சிலைகளுடன், இறுதி இடமான 'கைலாசம்' காட்சியளிக்கிறது. குளிரூட்டப்பட்ட வெண்மையான பனிப்பொழிவுடன் 20 அடி உயரத் தில் தத்ரூபமாக சிவா பார்வதி பளிங்கு சிலைகள் கைலாயத்திற்க்கே சென்று தரிசிப்பதை போன்ற பரவச உணர்வை ஏற்படுத்தியது.

"அகம் ப்ரம்மாஸ்மி" தத்துவம் உணர்த்தப்பட்டது. குண்டலினி சகஸ்ராரத்தில் ஆக்ரமித்து கொண்டு மனங்குளிர தன்னை உணர வைத்தது. ஆனந்த பிரவாகம் கண்களில் கண்ணீர் துளியை வரவழைத்தது. பரவ சத்தில் மிதந்துகொண்டே மற்று மொரு குன்று போன்று வடி வமைக்கப்பட்ட இறங்கு குகை வழியாக இறங்க ஆரம்பித்தோம்.

சைவ வைஷ்ணவ பாலமாக விளங்கும் விநாயக பெருமானின் அனந்தசயன கோலத்தை கண்டு வணங்கி விட்டு, அனைத்து ஐஸ்வர்யங்களையும் வழங்கும் அஷ்ட லக்ஷ்மிகளையும் ஒவ்வொரு தளமாக தரிசித்து இறங்கி தரை தளத்தில் பாற்கடலில் பள்ளிகொன் டுள்ள அனந்த சயன பெருமாளின் வைகுண்ட திருக்கோலத்தையும் தரிசித்துவிட்டு வெளியில் வரும்படி குகை அமைப்பு இருக்கின்றது.

அருமையான ஆன்மிக அனுப வத்தை ஆத்ம ஞானத்துடன் கலந்து, சுற்று சூழல் மற்றும் கட்டிட கலை நுணுக்கத்துடன் வழங்கிய மஹேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயில் நிர்வாகத்திற்கு மனதார நன்றி தெரிவித்து தக்ஷிண கைலாஷ் எனப்படும் இந்த கோயில் விட்டு மனநிறைவுடன் வெளியில் வந்தோம்.

சமயம் கிடைக்கும்போது அல்லது திருவனந்தபுரம் செல்லும் வாய்ப்பிருக்கும் போது அனைவரும் ஒருமுறை இந்த கோவிலுக்கு சென்று நமக்குள் இருக்கும் "அகம் பிரம்மாஸ்மி" யை வெளிப்படுத்தும் கட்டிட கலை ஆச்சரியத்தை கண்டு "ஆத்மஞான" அனுபவத்தை பெற வேண்டுகிறேன். ●

“வரன் தேவை”



ஜாதகக்குறிப்பு

பெயர்	:	S.தினேஷ்கண்ணா
தந்தை பெயர்	:	E.செல்வமணி,M.A.,M.Ed., ஆசிரியர்(ஓய்வு)
தாயார் பெயர்	:	S.ரமாபாய் (குடும்பத் தலைவி)
பிறந்த தேதி	:	26-02-1983
பிறந்த நேரம்	:	விடியற்காலை 3.20 மணி
கல்வித் தகுதி	:	M.Sc.,CAIIB,MBA.,
இனம்	:	இந்து-அகமுடையார்
ஜென்ம நட்சத்திரம்	:	ஆயில்யம்
ஜென்ம ராசி	:	கடகம்
ஜென்ம லக்கினம்	:	தனுசு
பிறந்த ஊர்	:	காஞ்சிபுரம்
உடன் பிறந்தோர்	:	மூத்த சகோதரர்-1(திருமணமானவர்) AGM--லட்சுமி விலாஸ் வங்கி சென்னை
சொத்து விவரம்	:	மாடி வீடு-2, மனை-1
தொழில்	:	Manager,Karnataka Bank,Chennai.
வருமானம்	:	1Lakh
நிறம்	:	சிவப்பு
உயரம்	:	5'6''
முகவரி	:	எண்.108/77ஏ,சாலைத் தெரு, பெரிய காஞ்சிபுரம்-631502.
செல் நம்பர்	:	9003263020,9597191297

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும்

"சாய் சங்கமம்"

14.12.2025 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணியில் இருந்து மதியம் 2 மணிவரை

சாயி பஜன், குத்துவிளக்கு பூஜை, ஜோதி தியானம், பிரார்த்தனை, ஹோமம், அன்னதானம், சத்சங்கம்



இம்மாத மாபெரும் ஹோமம்

"ஸ்ரீ ருத்ர ஹோமம்"

(மனம் மற்றும் உடல் ஆரோக்கியம், எதிர்மறை ஆற்றல் நீக்கம், செழிப்பு மற்றும் வெற்றி, உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு, ஆன்மீக வளர்ச்சி, தடைகளை நீக்குதல்)

ஹோம காணிக்கை:

ரூ.500/-

குறிப்பு: ஹோமத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஹோமப் பொருட்கள் அன்னதானத்திற்கு காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விபரங்களுக்கு :

திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்

போன்: 63851 29372

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"




பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்

புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

தொடர்புக்கு: 9941816692.

SAI DHYANALAYA



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த


"குருவைத்தேடி"

நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள

"சாயி தாயத்து"

இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692


தோபா சுவாமிகள்

திருச்சிராப்பள்ளியில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் சிவகுரு நாதப்பிள்ளையும் சிவகாமி அம்மையாரும் கருத்தொருமித்த தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர், சிவகுருநாதப் பிள்ளை இல்லறத்தை நல்லறமாகச் செய்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் இரண்டு ஆண் மக்களையும், பெண் மகவு ஒன்றையும் பெற்றனர்.

அதன் பின்னர் சில நாட்களுக்குப் பிறகு இவர் தன் மனைவியாருடன் மூர்த்தி தல தீர்த்தங்களை முறையாகச் செய்து கொண்டு முடிவில் இராமேஸ்வரம் சென்று அங்கு இராமபிரான் பூசித்த இராமலிங்கப் பெருமானை வணங்கிப் போற்றி வந்தனர்.

இவர்கள் இராமேஸ்வம் சென்று வந்த பிறகு முற்பிறவி தவப்பயனாலும் இராமலிங்கப் பெருமானின் திருவருளாலும் சிவகாமி அம்மையார் கர்ப்பம் தரித்து உரிய காலத்தில் ஓர் ஆண் மகனை பெற்றார்.

இராம நாத சுவாமியின் திருவருளால் பிறந்த நம் சுவாமிகளுக்கு இராமலிங்கம் எனத் திருநாமமிட்டனர். பாலப் பருவம் நீங்கி குமாரப் பருவம் எய்திய இராமலிங்கத்தை முறைப்படி கல்வி கற்க பள்ளியில் சேர்த்தனர்.



முற்பிறப்புக்களிலேயே அனைத்துங் கற்ற இவர் வருத்தமின்றி பழைய பாடங்களைத் திருப்புவதைப் போல ஆசிரியர்களும், மாணாக்கர்களும் வியக்கும் வண்ணம் கற்றுத் தேர்ந்தார்.

இந்த இராமலிங்கச் சிறுவரின் நிலையைக்கண்ட ஆங்கில அரசு

யோகி ஸ்ரீராம் பாபா

தம் காலாட் படையில் சேர்த்து கொண்டது. இவர் பணியாற்றிய படைப்பிரிவு சென்னையை அடுத்துள்ள ஆவடியில் இருந்தது. ஆங்கிலேயர் படைப்பயிற்சியில் தினமும் காலை 6.00 மணி முதல் ஒரு மணிநேரம் வரை படைப் பயிற்சி நடைபெறும். அதன் பிறகு தேனீர், வகுப்புகள், சிற்றுண்டி என்று பல பிரிவுகள் முறைப்படி தொடர்ந்து நடைபெறும். எல்லாப் பணிகளையும் இவர் திருப்திகர மாகவே செய்து வந்தார்.

பணி நேரம் தவிர மற்ற நேரங் களில் படைவீர்ர்கள் வெளியில் சென்று வருவார்கள் ஆனால் தோபா சாமியோ சுறுசுறுப்பான இளைஞனாக இருந்த போதும் அவர் வெளியில் செல்வதே இல்லை பணிமுடிந்தவுடன் படைவீரர்கள் தங்கும் இடத்திலேயே இறை சிந்தையோடு நிஷ்டையில் ஆழ்ந்து விடுவார். காலம் செல்லச் செல்ல அவருடைய தவக்காலமும் அதி கரித்தது.

படைவீரர்கள் தங்கும் இடத்தை மேற் பார்வையிட தினமும் இரவு வேளைகளில் கண்காணிப்புக் காவலர்கள் சோதனைக்கு வந்து செல்வார்கள் சிறிது நாட்களுக்கு பிறகு சாமி இரவு வேளை களில் தியானம் செய்தபடி இருப் பதையும் காலை 6.00 மணிக் கெல்லாம் படைப்பயிற்சித் திடலுக்கு முறைப்படி வந்து விடுவதால் அவர் இரவு தியானம் செய்வதை ஒரு குறையாகவே எடுத்துகொள்ளவில்லை.

அதுபற்றி காவலர்கள் தன்னு டைய உயர் அதிகாரிகளுக்கு



தெரிவிக்கவும் இல்லை.

இப்படியிருக்கும் பொழுது ஒரு நாள் படைப்பிரிவின் மேலதிகாரி படைவீரர்கள் தங்கியிருந்த கூடாரத் தினுள் நுழைந்தார், எல்லோரும் பயிற்சித் திடலுக்கு சென்றிருந்த போது சாமி மட்டும் அவர் தம் இருப்பிடத்திலே அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் இருந்தை கண்டு அதிர்ச்சி அடைந்தார் இருப்பினும் அவர் சுவாமியின் தவத்தைக் கலைக்காமல் படைப்பயிற்சித் திடலுக்கு வந்தார் அங்கு வந்த மேலதிகாரி அதிசயத்தக்க வகையில் சாமி அவர்கள் முறையான சீருடையுடன் படைப்பயிற்சி பெறத் தயராக அவருக்கு உரிய வரிசையில்

நின்று கொண்டிருந்ததையும் கண்டார்.

உடனே மேலதிகாரி இந்தப் படைவீரர் ஒரு மகா சித்தர் என்று தன் மனதுக்குள் சொல்லிக்கொண்டு சென்று விட்டார். இதன் பின்னர் சுவாமி அவர்கள் தன் படைவீரர் பணியை விட்டு விலகி சுதந்திர துறவியாக (ஆடை இல்லாமல்) வெளியில் வந்து, சென்னையிலும், சென்னையச் சுற்றியிள்ள பகுதி களிலும் தம் சித்தாடல்களைச் செய்துகொண்டிருந்தார்.

தோபாசித்தர் அவர்கள் திருஞானசம்பந்தப் பெருமானை மானசீக குருவாக கொண்டவர். அவர்தம் முதல் பதிகமான தோடுடைய செவியன் பதிகம் மீது மிகவும் காதல் கொண்டவர் இந்த பாடலை அவர் கேட்டவுடன் தன் நிலை மறந்து வீற்றிருப்பார். சென்னையில் அவர் தங்கியிருந்த பகுதியில் வாழும் சிறுவர்கள், சுவாமி அவர்களை சுற்றி சுற்றி வருவார்கள். அச் சிறுவர்களை சுவாமி அவர்கள் தோடுடைய செவியன் என்ற பாடலை பாடுங்கள் என்று கேட்பார் அவர் களும் உடனே பாடுவார்கள்.


இவ்வாறு பல நாள் தொடர்ந்து நடந்தது கொஞ்ச நாட்களுக்கு பிறகு அச் சிறுவர்களை பார்த்து தோ பா என்றார் 'தோ' என்பது தோடுடைய செவியன் என்ற பாடலையும் 'பா' என்ற எழுத்து பாடுங்கள் என்பதையும் குறிக்கும். தோ பா என்ற உடனேயே சிறுவர்கள் பாடத் தொடங்கி விடுவார்கள், இதனால் சிறுவர்கள் இவரை அன்புடன் 'தோபாசாமி' என்று அழைத்தனர்.

தோடு உடைய செவியன், விடை ஏறி, ஓர் தூ வெண்மதி சூடி, காடு உடைய சுடலைப் பொடி பூசி, என் உள்ளம் கவர் கள்வன்

ஏடு உடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த, அருள்செய்த, பீடு உடைய பிரமாபுரம் மேவிய, பெம்மான் இவன் அன்றே!


சென்னையில் பல சித்துகள் புரிந்த சுவாமி அவர்கள் ஒருமுறை சென்னையில் உள்ள திருவொற்றியூரில், நம் தோபா சுவாமிகள் ஒரு நாள் தெருவோரம் அமர்ந்து இருந்தார். அந்த தெருவில் போவோர் வருவோரைப் பார்த்து அவரவர் குணங்களுக்கேற்ப நாய் போகிறது, நரி போகிறது, கழுதை போகிறது, பேய் திரிகிறது எனப் பகர்ந்தவண்ணமிருந்தார்.

அந்நேரத்தில் வடலூர் வள்ளல் அவர்கள் அத்தெருவழியாக



வரவே, மனிதர் வருகிறார் என்றார். இதனைக் கேட்டு அருகில் நின்றுகொண்டிருந்த சிலர் இவர் ஒரு பைத்தியம் எனக் கூறினார். ஆனால் வள்ளல் பெருமான் இவரின் நிலை உணர்ந்தார் இவரும் யாமும் ஒத்த நிலையுடையோம் இவர் திக்கு ஆடையினார்; யாம் வெண்ணிற ஆடையினோம், இதுவே வேறுபாடு எனக்கூறி நமது தோபா சாமிகளிடம் சிறிது நேரம் பேசிவிட்டு பிரிவாற்றாது நீங்கிப் போனார்.

சென்னையில் இருந்த சுவாமி அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னையை விட்டு வெளியேற முற்பட்டார் அப்போது அவருடைய முக்கிய சீடர்கள் சிலர் அவரை ஒரு குதிரை வண்டியில் ஏற்றி அழைத்துச் சென்றனர், குதிரைவண்டி வேலூர் சென்றதும் அங்கே சாமி இறங்கிவிட்டார் அதன் பிறகு சாமி வேறு எங்கும் செல்லவில்லை வேலூரிலேயே சுமார் 12 ஆண்டுகள் சித்தாடல்கள் பல புரிந்துகொண்டு வந்தார்.




இவ்வாறாக நமது தோபா சுவாமிகள் தன்னுடைய குரு நாதரான திருஞானசம்பந்த பெருமான் அருளால் அநேக திருவிளையாடல்களைப் புரிந்தும். தம்மைச் சரணடைந்த சீடர்களுக்கு ஞானம் வழங்கும் ஓர் அற்புத துறவுச் சக்கரவர்த்தியாய் விளங்கினார்.

அருட்தந்தையாக வாழ்ந்த நமது தோபா சுவாமி அவர்கள் கி.பி.1850 ஆம் ஆண்டு சாதாரண வருடம் பங்குனி திங்கள் இருபத்தி ஏழாம் நாள் புதன்கிழமை பூர்பவட்சம் பிரதமை திதி இரேவதி நட்சத்திரம் கூடிய நன்னாளில் ஒடுக்க நிலை நின்றார்.

வேலூர் மக்கள் இன்றும் அவரைத் தெய்வமாகக் கருதி அவர் சமாதியில் வழிபாடு செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் அவர் சமாதி அடைந்த நாளில் குரு பூஜை வெகுசிறப்பாக நடைபெற்று வருகிறது சமீபத்தில் இந்த மடாலயத்தில் கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறியது.

தோபாசாமி மடலாயம் இருக்கும் இடம் வேலூர் சைதாப்பேட்டை. ●

ஆத்மசாதனை



நம் வாழ்க்கையின் அடித்தளம் ஊழ்வினையே! அதுவே சிந்தனைக்கும், செயல்பாட்டிற்குமான காரணமாக அமைகிறது! அந்த ஊழ்வினைகளில் புண்ணியம் மேலோங்கி இருந்தால் சாந்த குணமாக திகழ்கிறது. பாவம் மேலோங்கி இருந்தால் மிருக குணமாக இருக்கிறது பொதுவாக மனிதர்களுக்கு இரண்டும் கலந்தே இருக்கும் என்பதால் அடிக்கடி உணர்ச்சிவசப்படுவது நேர்கிறது! ஆகவே தான் மனிதன் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு விதமாக நடந்து கொள்கிறான்!

சில நேரங்களில் சில மனிதர்கள் என்பதற்கு இதுவே அர்த்தம்! ஆனால் ஆன்ம சாதனை அந்த குறை பாட்டை சரி செய்கின்றது! மனிதனின் வியாதிக்கு 90% மனமே காரணம்! அந்த மனம் அடங்குவதற்கு தியானப் பயிற்சி அவசியம் ஆழமான தியானத்தில் எதிர்கால கடந்தகால நினைவுகளைக்கூட நாம் அறியலாம். கடந்த ஜென்மத்தில் நாம் பழகிய நல்ல விஷயங்களை இந்த ஜென்மத்தில் பழக முயற்சிக்கலாம். தீய விஷயத்தை தவிர்க்கலாம்!

எதிர்காலமும் அவ்வாறே! இறைவன் பாபாவே அதற்கான இயக்குநர்! நாம் வெறும் பங்கேற் பாளர்களே! பாபாவே காலத்தை இயக்குகிறார். நம்மைப் போன்ற பங் கேற்பாளர்களுக்கு எதிலும் சொந்தம் கொண்டாட,எதையும் பிடித்து வைக்க, யாரையும் உயிரென கருத எந்த உரிமையும் இல்லை! இதை உணர்ந்தால் ஞானத்தை நோக்கி நாம் முதல் அடியை எடுத்து வைக்கின்றோம் என்று அர்த்தம்.


சாயிபாபா கடவுளா?


'சீரடி மாஜே பண்டரீபுரா, சாயி பாபா ரமாவர ', அதாவது, சீரடியே எனது பண்டரிபுரம், சாயிபாபாவே விட்டல்' என்ற பொருள்கொண்ட, ஆரத்தி பாடல் தினமும் சாயிபாபாவின் பூஜையில் பாடப்பட்டு வருகிறது.

இதை இயற்றியவர் தாஸ்கணு மகராஜ். என்ற சாயி அடியவர். பம்பாய் மாகாணம் முழுவதும் சாயியின் பெயர் விரைவாகப் பரவ தாஸ்கணு மகராஜ் அவர்களின் முயற்சிகளே முக்கிய காரணம். ஆயினும் பாபாவே விட்டல் என்று ஆரத்தி பாடினாலும், கடைசிவரை அவர் பாபாவை தெய்வமே என்று உணர்ந்து கொள்ள முடியவில்லை.

பாபாவிடமும் அவருடைய சக்திகள் மீதும் அவருக்கு பெரும் மதிப்பு இருந்தும், தமது கவித்திறனைக் கொண்டு பாபாவை 'ரமாவர' அதாவது ஸ்ரீ விஷ்ணுவே, எனப் போற்றி ஒரு பாட்டு இயற்றிய போதும், அவரால் தமது குரு தேவராக ஏற்க முடியவில்லை. உதட்டளவு துதியே செய்ய முடிந்தது.

ஆகவே தான், பாபாவை சந்தித்த நீண்ட காலத்திற்குப் பின்னும் உபதேசம் பெரும் நோக்கத்துடன் இஸ்லாம்பூர்கர் என்ற பிராம்மண குரு ஒருவரை அவர் நாடிச் சென்றார். (தாஸ்கணு இதை பாபாவிடம் தெரிவித்தபோது பாபா ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லை). கணுவின் நலனுக்காக பாபாவின் வியக்கத்தக்க உதவி கிட்டியும்,





பாபா கடவுள் என்ற அபிப்பிராயம் அவருக்கு ஏற்படவில்லை.

பாபா அவருக்கு செய்ததை விட மிகக் குறைந்த அளவு பலன் பெற்றவர்கள் கூட பாபா இறை வனே என்ற பூரண விசுவாசம் பெற்றனர். இந்த தாஸ்கணுவுக்கு பாபா மிகச் சிறந்த நலன்களை அளித் தார். ஆனால் துரதிருஷ்ட வசமாக அவரால், பாபா இறை வனே என்று உணர முடியாமல் போயிற்று.

நம்மில் பலரும் சாயி சாயி என்று பாபா நாமம் சொல்லி வந்தாலும், வீட்டில் பாபா படமும் சிலையும் வைத்திருந்தாலும், பாபாவை இறைவன் என்ற ஸ்தானத்தில் வைப்பதில்லை. ஆனால் தீவிர நம்பிக்கை கொண்டு பாபாவை அணுகினால், தானே இறைவன் என்று பாபாவே வெளிப் படுத்துவார். இதை உணர்ந்தவன் மிகப்பெரும் பாக்கியவான் .

"மூவுலகங்களிலும் தேடினா லும் பாபாவைப் போன்ற தர்ம தாதாவை காண்பதரிது. சரண மடைந்தவர்களுக்கு மாபெரும் புகலிடமான பாபாவிடம் வேறெ தையும் நாடாமல் பரிபூரணமாக சரணடைவோமாக."

'சீரடி மாஜே பண்டரீபுரா , சாயி பாபா ரமாவர ', அதாவது, சீரடியே எனது பண்டரிபுரம், சாயிபாபாவே விட்டல்' என்று பாடலுக்காக வெறும் வார்த்தையாக மேலோட்ட மாக பாடாமல் ஆழமாக பாபாவே பரம்பொருள் என்று உணர்வோமாக!

திரு. தாஸ்கணு மகராஜ் எல்லாம் ஞானங்களும் பொருந்திய அதி மேதாவி. தான் அதி மேதாவி என்னும் எண்ணமே தனது முன்னால் ரத்தமும் சதையுமாக வாழ்ந்து வந்த பரம் பொருளான பாபாவை அடையாளம் காண விடாமல் தடுத்தது. ஆயினும் தாஸ்கணு மகராஜ் தன்னுடைய இறுதிக்காலத்தில், "நான் என்னுடன் வாழ்ந்த பரம்பொருளை உணராமல் தவறவிட்டுவிட்டேன்" என்று வருந்தியிருக்கின்றார்.

இதைத்தான் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பார் கள். சாயி பக்தர்களே! விழித்துக் கொள்ளுங்கள். பகவான் சாயி நாதரை இக்கணமே, இத்தருணமே கடவுளாக பாவிக்க முயற்சி எடுங் கள். சாயி சகலமும் பொருந்திய கடவு ளேயாவார். அவர் குரு அல்ல, தன்னை அடைய "குருவைப் பின்பற் றுங்கள்" என்று வாழ்ந்து காட்டியவர்.

ஓம் சாய்ராம்! ஓம் சாய்ராம்! ஓம் சாய்ராம்.



குருட்டினை நீக்கும் குரு

நான் யார்? இப்பிறவியின் நோக்கம் என்ன?

ஏன் இவ்வுடலை எடுத்தேன்? இவ்வுடல் என்றால் என்ன? உயிர் என்றால் என்ன? என்று பல கேள்விகள்.எவர் ஒருவர் தனது பிறப்பின் நோக்கம் அறிந்தவரே அவரே வாழ தகுதியுடையவர் ஆகிறார் அவர்களால் மட்டுமே மீண்டும் பிறவாமை என்ற நிலையை அடைய முடியும்.

எவ்வாறு இந்நிலையை அடைய முடியும் என்றால் அதற்கு, ஒரு குரு இருந்தால் மட்டுமே முடியும். அக்குருவை நான் எவ்வாறு அடையமுடியும்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி குருவே சிவம் என்பது குறித்து ஓரார் குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும் குருவே உரை உணர்வு அற்றதோர் கோவே.

ஒரு வருடம் தவமிருப்பார் திருமூலர். ஒரு பாடலைப் பாடுவார். மீண்டும் தவத்தில் மூழ்குவார். ஒருவருடம் முடிந்த தும் தவத்தால் தாம் பெற்ற அனுப வத்தை ஒரு பாடலாகப் பாடுவார். அப்படி மூவாயிரம் ஆண்டுகள் தவமியற்றி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களை அருளிச் செய்தார்கள் திருமூல நாயனார்.

குருவின் அவசியம் பற்றி நாயனார் வழி நின்று மேலே உள்ள பாடலைச் சிந்திப்போம். கடவுள், மனித உருவத்தில் தம்மைத் தெரிவித்துக் கொள்ளும் பெரிய அவ தாரங்களே குருமார்கள். அவர் களைக் கடவுளாகவே நினைத்துப் போற்ற வேண்டும். குருமார்கள் எல்லாம் கடவுளின் பிரதிநிதிகள் என்றே கொள்ள வேண்டும்.

சிவபெருமானின் ஆணையை ஏற்று இவ்வுலகிற்கு நலம் செய்வதற்காகவே பிறப்பெடுக்கும் புண்ணிய மூர்த்திகளே குருமார்கள். பழகிய யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பது போல, நம்மைப் போலவே மானிட வடிவம் தாங்கிக் கடவுளே நம்மை

உய்விக்கக் குருவடிவில் வருவதாகக் கொள்ள வேண்டும்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசகப் பெருமான் போன்றவர்களில்லை என்றால் உலகில் அன்பு நெறி காணப்படுமா?

கட்டையில் நெருப்புள்ளது. அந்த நெருப்பினை வெளியே கொண்டுவர, வேறு ஒரு கட்டை வேண்டும். வேறு ஒரு கட்டையுடன் சேர்த்து உரசும் பொழுது, கட்டையினுள்ளிருக்கும் நெருப்பு வெளியே வருகிறது. அதைப்போல நம் உள்ளே இருக்கும் ஆன்ம ஒளியை, வேறு மனித வடிவம் தாங்கி வரும் குருவால்தான் வெளியே கொண்டுவர முடியும்.

பசுவிடம் பால் பெறுவதற்கு கன்றுக்குட்டி அவசியமாதல் போல, சிவ பெருமானது திருவருளைப் பெறுவதற்குக் குருவருள் அவசியமாகும்.சூரிய காந்தக் கல்லின் மீது சூரிய ஒளி பட்டவுடன் நெருப்பு எழுவது போல, குருவின் அருட்பார்வை நம்மீது பட்டவுடன் மெய்ஞானம் தோன்றும். குருவினால் இப்பிறவியில் பெறும் ஞானம் எடுக்கின்ற பிறவிகள் தோறும் தொடர்ந்து வருவதாகும்.

"கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக" என்றும் திருமூல நாயனார் அறிவுறுத்துகின்றார். போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம் என்பதே இதன் உட்பொருள். பிறகு குருடும் குருடும் கூடிவிளையாடி குழியில் விழுந்தாற் போலாகிவிடும்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார் குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர் குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக் குருடுங் குருடும் குழிவிழுமாறே

அறியாமையைப் போகும் நல்ல ஆசிரியரையே தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் தெளிவு பெற்றவராக இருத்தல் வேண்டும். குரு என்பவர் வாழ்ந்து காட்டுபவர் ஆவார். அவர் வாழும் வாழ்க்கையே பாடமாக அமையும். குரு உலகத்தின் மீது பற்றற்றும், சிவத்தின் மீது மாறாத அன்பும் உடையவராகத் திகழ்வார். அவரால் உலகம் பல நன்மைகளை அடையும். அத்தகைய குருவின் திருமேனியைக் கண்டாலே புண்ணியம் என்கிறார் திருமூலர்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல் தெளிவு குருவின் திருநாமம் செப்பல் தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல் தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

மாதா, பிதாவால் நம் ஜனனம் நிகழ்கிறது. இந்த பிறப்பை அர்த்தமுள்ளதாகச் செய்பவர்கள் நம் ஆசிரியர்களே! குருவருளால் தான் திருவருள் – இறைவனின் அருள் கிடைத்து நிம்மதியாக வாழ முடியும்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, "அ'வில் துவங்கி, உயர்கல்வி வரை கற்றுத் தந்து அவர்களை சீர்திருத்தும் சிற்பிகள் ஆசிரியர்களே! ஆசிரியர்கள் சொன்னதைக் கேட்டு எந்த ஒரு மாணவன் தன்னை சீர்படுத் திக் கொள்கிறானோ, அவன் பிற் காலத்தில் நிம்மதியாக இருப்பான்.

பகவான் கிருஷ்ணரும், குசேலரும் பள்ளிக்கூட நண்பர்கள். அக்காலத்தில் குருகுலத்தில் படிக்கும் மாணவர்கள், அங்கேயே தங்கிப் படிக்க வேண்டும் பள்ளி நேரம் தவிர, மற்ற சமயங்களில் குரு இடும் கட்டளைகளைச் செய்ய வேண்டும். ஒருநாள், இவர்களது குரு சாந்தீபனி முனிவரின் மனைவி, கிருஷ்ணரையும், குசேலரையும் சமைப்பதற்கு விறகு பொறுக்கி வரச்சொல்லி விட்டாள்.

குருவின் மனைவியின் கட்டளையை ஏற்ற அந்தக் குழந்தைகள், காட்டில் சென்று விறகு பொறுக்கினர். மழை வந்துவிட்டது. விறகு நனையாமல் இருக்க, ஒரு மரப்பொந்தில் அதை வைத்துவிட்டு, மழையில் நனைந்தபடி நின்றனர். இருட்டி விட்டது. குழந்தைகளைக் காணாத குரு, மனைவியைக் கடிந்து கொண்டு குழந்தைகளைத் தேடிச்சென்றார்.

குரு பத்தினியின் கட்டளையை நிறைவேற்ற விறகை மறைத்து விட்டு, மழையில் அவர்கள் நனைந்தது கண்டு கண்ணீர் வடித்தார். "நீங்கள் மிக நன்றாக இருப்பீர்கள். என ஆசிர்வதித்தார். அவரது ஆசிர்வாதம் பலித்தது. துவாரகையின் மன்னரானார் கிருஷ்ணர்; ஏழையான குசேலர், தன் நண்பனின் உதவியால் பெரும் செல்வந்தரானார்.

குருவின் சொல்லை இளமையில் கேட்டு நடப்பவர்கள் எதிர்காலத்தில் செல்வந்தர்களாக விளங்குவர். நம்மில் குரு அருள் நிரம்புவதை எப்படி கண்டறிந்து கொள்வது?



நினைத்த மாத்திரம் நம்மில் பொங்கும் பிரபஞ்ச ஓர்மை உணர்வு,

எண்ணங்களில் சீர்மை, அகத் தாய்ந்த எண்ணங்களே சொல்லாய் செயலாய் வெளிப்படல், புலனின்ப உணர்வுகளில் அளவு முறை, தவறாது அனைத்திடமும் பொங்கும் அன்பு, நிறை மனம், உள் உணர்வு, விளைவை ஆராய்ந்த செயல் முறை, சினமின்மை, கவலை இன்மை, இன்ன பிற பண்புகளால் அறியப் படுவார் குரு வழி நின்ற ஒரு நற்பண்பாளர்.

"சத்குருவின் அருளால் மனதைச் சும்மா இருக்க செய்தாலன்றி எல்லாரும் விரும்பும் அமைதியை

எவராலும், எவ்வழியிலும், எவ்வேளையிலும், எவ்விடத்திலும் அடைய முடியாது" என்பார் ரமணர்.

தகப்பனுக்கே உபதேசம் செய்து குருசுவாமியாகியவர் முருகன். ஆகவே குருவுக்கு வயது என்பது இல்லை. குருவானவர் எந்த வயதி னராகவும் இருக்கலாம். எந்தப் பாலினத்தவராகவும் இருக்கலாம்.

போலிக் குருவை அடையாளம் கண்டு கொண்டால் உண்மைக் குருவை யார் என்று தெரிந்து கொள்ளலாம்.

"வீணான நினைவுகளை விடாமல் எண்ணுபவர் செய்யும் உபதேசத்தில் சிவத்தியானம் சிறந்து வெளிப்படாது தீமைகளே வெளிப்படும். அவுபதேசத்தைக் கேட்பவர் அறிவு கெடும். அக்குருவால் வாழும் நாட்டுக்கும் அரசுக்கும் தீங்கு வரும்" என்கிறார் போலிக் குரு பற்றி திருமூலர்.

குரு ஒளியாயிருக்கிறார், சீடனுக்கு ஒளியை வழங்குகிறார், சீடனின் மனதில் இருக்கும் இருளை போக்குகிறார், சீடனை ஒளிமயமாக்குகிறார். ஆகவே எவர் சிந்தனைகள், சொற்கள் உன்னை தெளிய வைக்கிறதோ அவரே உனது குரு ஆவார் என்கிறார் சட்டைமுனி.

ஆகவே, உங்களைத் தெளிய வைப்பவரை உணர்வது உங்கள் உள்ளுணர்வேயாகும். அந்த உள்ளுணர்வு உங்கள் குருவை உங்களுக்கு அடையாளம் காட்டும் என்கிறார்கள் சித்தர்கள். ●

அன்பு சேவை



அகங்காரம் என்பது நம்முள் எழும் வெறும் ஒரு எண்ணமே! ஆனால் அந்த எண்ணத்தைத் தான் நாம் பெரிதாக கருதுகிறோம்! அதுவே மிகப்பெரிய மாயை! பிறவித்தொடராக வரும் நபது பூர்வ கர்மாவை கழித்து நமது மூலத்தோடு ஒன்றிணைவதற்கே உடலும் மனமும் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் அதையே நாமாக கருதி வாழ்கிற போது ஆன்ம உணர்வு எய்தாமல் மன உணர்ச்சியினால் உந்தப்பட்டு பிறவிகளை தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.

அப்பிறவிகளை நிறுத்த வேண்டுமானால் தியானம் செய்ய வேண்டும்.அப்படி தியானத்தில் ஆழும்போது ஆன்ம உணர்வு எய்துகிறோம்! ஆன்ம உணர்வின் மேலான நன்மை என்னவென்றால் நம்மை அனைத்தும் அறியும் தன்மையனராய் மாற்றுகிறது! இதற்கு தியானம் அவசியம்! தியானமே அத்வைத இலக்கை அடைய வைக்கிறது! அத்வைதமே இலக்கு!

துவைதம் வெறும் பாதை மட்டுமே! ஆனால் நமக்குள்ளே பயணிக்கிற போதுதான் இவை சாத்தியம்! ஆகவே தான் "அகங்காரத்தை பாபா எல்லா உயிர்களின் மீதும் அன்பு காட்டுவதன் மூலமாக கரைக்கச் சொல்கிறார்" அன்பிற் கான களமாகவே சேவையை திறந்து விட்டிருக்கிறார்! யார் பாபா வழி சேவை புரிந்தாலும் அதை வரவேற்று உற்சாகப் படுத்த வேண்டும்! இதுவே ஒவ்வொரு பாபா பக்தர்களின் அன்றாடக் கடமை! இதில் பேதமும் பாரபட்சமும் பார்க்கற போது நாம் அன்பை கீழே போட்டு உடைத்து விடுகிறோம்! அன்பில்லாமல் நாம் செய்யும் எந்த சேவையும் சேவையே அல்ல.



ருத்ர ஹோமம்

12.10.25 அன்று சாய் சங்கமம் வழங்கிய முதல் நிகழ்வு ஸ்ரீ சுதர்ஸன ஹோமத்துடன் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற நோக்கோடு யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் வழிகாட்டுதலோடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் சிறப்பு என்ன வென்றால் ஆண்களும் திருவிளக்கு பூஜை செய்யலாம் என்று உறுதி செய்யப்பட்டது.

இதற்கு ஒரு படி மேலே போய் வருகிற 14.12.25 ஞாயிறு அன்று நடைபெறும் சாய் சங்கமத்தில் "ருத்ர ஹோமம்" நடத்தப்பட இருக்கின்றது. இது சிவனுக்குரிய ஹோமம். அநேக நம்மைகளை வாரி வழங்கக்கூடிய இந்த அற்புத ஹோமத்தில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாய் அன்போடு அழைக்கின்றேன்

படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களைப் புரியும் மும்மூர்த்திகளுள் ஒருவர், சிவபெருமான். சிவபெருமானின் அம்சமே ருத்ர மூர்த்தி வடிவம் ஆகும். ரிக் வேதம், ருத்ரனை, "வல்லவருக்குள் வல்லவர்" எனப் போற்றுகிறது. இந்த சக்தி வாய்ந்த ருத்ரனுக்கு அர்ப்பணிக்கப்படும் ஹோமமே, ருத்ர ஹோமம் ஆகும்.

ருத்ரனை ஆராதிக்கும் வகையில் செய்யப்படும் இந்த ஹோமம், பயம் மற்றும் கவலையைப்

போக்கி, பாதுகாப்பை அளிக்க வல்லது. ருத்ரனின் அருளால், இக பர இன்பங்களை அள்ளித் தரக் கூடியது. மேலும், நவக்கிரகங்கள் எனப்படும் சக்தி வாய்ந்த ஒன்பது கோள்களை சாந்தப்படுத்தி, அதன் மூலம் தோஷங்களை நிவர்த்தி செய்து, நன்மை தரும் பலன்களை அதிகரிப்பதற்காகவும், இது மேற்கொள்ளப்படுகின்றது.

ருத்ர ஹோமம், மன இருளை அகற்ற வல்லது. தீய விளைவுகளை அழிக்க வல்லது. பயத்தைப் போக்க வல்லது. இந்த ஹோமத்திலிருந்து எழும் புனித ஆற்றல்கள், உங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் மாற்றியமைக்கும் வல்லமை படைத்தவை. பாதுகாப்பையும், வாழ்வின் நலன்கள் பலவற்றையும் அளிக்க வல்லவை. எதிர்மறைத் தாக்கங்களைப் போக்கி, அமைதியை அளிக்கக் கூடியவை. ஆகவே, இந்த ஹோமத்தில் பங்கு கொண்டு, பயம், கவலை போன்ற பலவீனங்களை அகற்றி, இன்னல்களிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

ருத்ர ஹோமம், வேத சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்த, அனுபவம் வாய்ந்த புரோகிதர்களால், ஆகம விதிப்படி, பக்தி சிரத்தையுடன் முறையாக நடத்தப்படுகிறது. இந்த ஹோமத்தின் பொழுது, யஜுர் வேதத்தில் கூறப்பட்டுள்ள, புராதனமான வேத ஸ்லோகமான ஸ்ரீ ருத்ரம் ஓதப்படுகின்றது. இவற்றில், ருத்ரனின் பல வடிவங்கள், அவரது பண்புகள் பற்றிக் கூறப் பட்டுள்ளன. இந்த மந்திரங்களை உச்சரிக்கும் போது எழும் ஒலியின் ஆற்றல் மிக்க சக்திகள், பல நன்மைகளை அளிக்கக் கூடியவை.

அனைத்து செயல்களிலும் வெற்றி பெறவும், எதிர்மறைத் தாக்கங்களை விலக்கி நன்மை பெறவும், இந்த ஹோமத்தில் வருடத் திற்கு ஒரு முறை கலந்து கொள்வது நல்லது. வசதி படைத்தவர்கள் தனியாகவும் நடத்தலாம்.

இந்த ஹோம வழிபாட்டில், ரட்சை என்று அழைக்கப்படும் ஹோம பஸ்மம் மற்றும் குங்குமம், உங்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும். இதனை உங்கள் பூஜை அறையில் வைத்து தினமும் உங்கள் நெற்றியில் பூசி இறைவனின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு: பூஜையில் நேரில் கலந்து கொள்ள முடியாத அன்பர்களுக்கு பிரசாதம் கொரியரில் அனுப்பி வைக்கப்படும். ஹோமத்தில் கலந்து கொள்ள நபர் ஒருவருக்கு காணிக்கை ரூ.500/– ஹோமத்தில் கலந்து கொள்ள விருப்பம் இருப்பவர்கள் கீழ்கண்ட முகவரியில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். ●



சாய்தாசன் கோபால்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற் றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள் ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

பாபா சீரடியில் வாழத்தொடங்கிய தும், சீரடி ஒரு புண்ணிய பூமியாக மாறியது. நாட்டின் பல திசைகளில் இருந்தும் மக் கள் அங்கே கூடத் தொடங் கினார்கள். பாபாவின் தரிசனத்தால் ஏழைகளும், பணக் காரர்களும் பாகுபாடில்லாமல் பல வகையிலும் நன்மையடையத் தொடங்கினார்கள்.

பாபாவின் அன்பையும், அவரது வியக்கத்தக்க ஞானத்தையும், எங்கும் நிறைந்திருக்கும் அவரது பேராற்ற லையும் யார் விவ ரிக்க முடியும். இவைகளில் ஏதாவது ஒன்றை



சாய்சரிதம்-21

கதை வடிவில்

பாபாவிடம் நேரில் அனுப வித்தவர்கள் எப்பேர்பட்ட பாக்கிய சாலிகள். அவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அல்லவா!

பாபா சில நேரங்களில் மிக நீண்ட நேரம் மௌனமாக இருந்தார். அதுவே அவரின் பிரம் மத்தன்மை. சில நேரங்களில் தமது அடியவர்களிடம் உணர்வுப் பூர்வமாக சிரித்து விளையாடி ஆனந்தத்தின் அவதாரமாகத் தெரிந்தார். ஒரு சில நேரங்களில் கடுமையான கோபம் கொண்டவர் போல் தோன்றினாலும் அதன் முடிவில் தனது எண்ணங்களையும், நியாயங்களையும் ரத்தினச்சுருக்க மாக வெளிப்படுத்தினார். சில நேரங்களில் அதைப்பற்றி விரிவான விவாதம் நடத்தினார்.

இப்படியாக தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அவரவர்களுக்கு தேவைக்கேற்றவாறு, புத்திமதிகளை யும், கட்டளைகளையும் இட்டார். ஆகவே பாபாவின் வாழ்க்கை முறையை நாம் நமது அறிவால் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது. நமது வாழ்க்கை, புத்தி சாதுர்யம், நமது மொழிகளுக்கு அப்பாற்பட்டது பாபாவின் ஞானம். இவை அனைத்தையும் கடந்து நாம் அவரின் அருகில் கூட நெருங்கமுடியாது. இருப்பினும், நாம் சாயி பக்தர்கள் என்றவுடன் மகிழ்ச்சியால் நிரம்பி வழிகின்றோம்.

மழையின் துளிகளை எண்ணி விடலாம். காற்றை தோல் பையினில் அடைத்து விடலாம். ஆனால் பாபாவின் லீலைகளை அளக்க முடியாது. அவரது வியக்கத்தக்க பண்புகளில் ஒரு பண்பாகிய தன் பக்தர்களுக்கு வரும் பேராபத்துக்களை முன் கூட்டிய கூறி அவர்களை காத்த லீலையினில் சிலவற்றை கூறுகின்றேன்.

கோபர்காங்வின் மம்லத்தார ரான பாலாசாகேப் மிராகர் என்பவர் சிதலீக்கு சுற்றுப்பயணம் சென்று கொண்டிருந்தார். வழியில் சீரடிக்கு சாயிபாபாவை தரிசனம் செய்ய வந்திருந்தார். மசூதிக்குச் சென்று பாபாவைப்பணிந்து வணங்கியபின் வழக்கமான உரையாடல் தொடங்கியது. பேச்சின்ஊடே பாபா, மிராக்கருக்கு, எச்சரிக்கையாக இருக்கும்படி குறிப்பு ஒன்றை கூறினார்.

பாலாசாகேப்பிடம் பாபா, உங்களுக்கு நமது துவாரகா மாயியைத் தெரியுமா? என்று கேட்டார். பாலாசாகேப்புக்கு பாபா கூறியது புரியாததால் மௌன மாக இருந்தார். பாபா தொடர்ந்து நீங்கள் அமர்ந்துகொண்டிருக்கும் இதுவே நமது துவாரகாமாயி. தனது மடியில் அமரும் அனைத்து குழந்தைகளுக்கு ஏற்படும் ஆபத்துக் களையும், கவலைகளையும் தடுத்து விலக்குபவள்.

இந்தமசூதிமாயிமிகவும்கருணை உள்ளவள். அவள் தன் மடியில் ஒரு முறை அமர்ந்தவர்களைக்கூட பேராபத்துக்களில் இருந்து பாது காக்கின்றாள். அவளின் நிழலில் இளைப்பாறுவோர் நிரந்தரமாக பேரானந்தத்தை பெறுகின்றார்கள் என்ற பாபா, அவருக்கு உதியை அளித்து அவரின் தலையில் தனது கரங்களை வைத்து ஆசீர்வதித்து,

உங்களுக்கு லம்பா பாவாவைத் தெரியுமா? என்று கேட்டார். இப்போதும் மிரீகர் விழித்தார்.


உடனே பாபா ஒரு கையை மடக்கி மற்றொரு கையின்மேல் பாம்பைப் போன்று வைத்து ஆட்டிக்காட்டி, அவன் அவ்வளவு பயங்கரமானவன். ஆனால் துவாரகாமாயியின் குழந்தைகளை அவன் என்ன செய்ய முடியும். துவாரகாமாயி பாதுகாக்கும் போது பாம்பு என்ன செய்ய முடியும்? என்று கூறினார்.

பாபா கூறியது எதுவும் மிரீகருக்கு புரியவில்லை. ஆனால் அங்கு ஏற்கனவே கூடியிருந்த அனைவரும் பாபா கூறியதன் பொருளை அறிய ஆவலாக இருந்தனர். ஆனால் இதைப்பற்றி பாபாவிடம் கேட்க ஒருவருக்கும் துணிவில்லை. பின்னர் பாலாசாகேப் பாபாவை வணங்கி ஆசிபெற்று சாமாவுடன் மசூதியை விட்டுப் பறப்பட்டார்.

பாபா சாமாவை மட்டும் கூப்பிட்டு, பாலாசாகேப்புடன் சிதலி வரை நீயும் அவருடன் சென்று வா என்று கட்டளையிட்டார். சாமாவும் மிரீகரிடம் பாபா கூறியதைக்கூறி நானும் தங்களுடன் சிதலீ வரை வருகின்றேன் என்று கூறினார்.

அதற்கு பாலாசாகேப் தான் தனியாக செல்வதற்கு மட்டமே ஏற்பாடுகள் செய்திருப்பதால் தாங்களும் என்னுடன் வந்தால் எனக்கு அசௌகரியமாக இருக்கும். ஆதலால் வேண்டாம் என்று கூறிவிட்டார்.

இந்த தகவலை சாமா பாபாவிடம் தெரிவித்தார். உடனே



பாபா, நல்லது அப்படியே செய். நாம் நல்லவற்றையே சொல்ல வேண்டும். நல்லதையே செய்யவேண்டும். எது நடக்க வேண்டும் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கின்றதோ அது நடந்துதான் தீரும் என்று கூறினார்.

இதற்கிடையில் பாலாசாகேப், பாபா சாமா மூலம் கூறியதை சற்று சிந்தித்துப் பார்த்தார். பாபா கூறியதை தட்ட வேண்டாம என்று நினைத்து சாமாவைக் கூப்பிட்டு தன்னுடன் வருமாறு அழைத்துக்கொண்டார். பின்னர் சாமா பாபாவிடம் சென்று அனுமதி பெற்றுக்கொண்டு பாலாசாகேப்புடன் அவரது குதிரை வண்டியில் புறப்பட்டார்.

அவர்கள் சிதலீக்கு அன்றிரவு ஒன்பது மணிக்கு போய்ச் சேர்ந்தார்கள். பாலாசாகேப்பின் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் அவரை வரவேற்க வரவில்லையாதலால் அவர்கள் அருகில் இருக்கும் மாருதிக் கோவிலில் தங்கினார்கள். காலத்தைப் போக்குவதற்காக கோவிலில் இருந்தவர்கள் பேசிக் கொண்டும், அரட்டை அடித்துக் கொண்டும் இருந்தனர்.

பாலாசாகேப் பாயின் அமர்ந்து அன்றைய நாளிதழைப் படித்துக் கொண்டிருந்தார். அவரின் மேல்வேட்டி இடுப்பின் மீது போட்டிருந்தார். அதன் ஒரு பக்கம் பாயின் மீது கிடந்தது. அதன் மீது ஒரு பெரிய பாம்பு அமர்ந்திருந்தது. அதை யாரும் கவனிக்கவில்லை. ஆனால் சற்று நேரத்தில் பாம்பு விடும் மூச்சு சப்தத்தை பாலாசாகேப்பின் பியூன் கவனித்து விட்டான். அவன் உடனே எங்களை உசார்படுத்திவிட்டு அருகில் இருந்து ஒரு விளக்கைக் கொண்டுவந்தான்.

விளக்கின் வெளிச்சத்தில் பாம்பைப் பார்த்து, பாம்பு, பாம்பு என்று கூச்சலிட்டான். பாம்பு பாலாசாகேப்பின் இடுப்பின் மீது சாய்ந்திருந்தது. பாலாசாகேப் பாம்பை பார்த்ததும் நடுங்கத் தொடங்கிவிட்டார். சாமாவும், மற்றவர்களும் சத்தமிடாமல் சென்று தடிகளை எடுத்துவந்தனர். பாம்பு மெதுவாக அவரது இடுப்பின் மீதிருந்து அப்பால் செல்லத் தொடங்கியது. உடனே அது அன்பர்களால் அடித்துக் கொல்லப் பட்டது. இந்நிகழ்விற்குப்பிறகு பாலாசாகேப்பிற்கு பாபாவிடம் உள்ள பக்தி மிகவும் ஆழமாக இறுகிப்போனது.

நானாசாகேப் டேங்க்லே என்ற சோதிடர் ஒருவர் சீரடியில் இருந்த திரு. பாபு சாகேப் பூட்டியிடம், ஒருநாள் "இந்தநாள் தங்களுக்கு ஒரு மோசமான நாள் உங்கள் உயிருக்குகூட ஆபத்து நேரலாம்" என்று கூறினார். இவ்வார்த்தை திரு. பூட்டி அவர்களை மிகுந்த மனவருத்தத்தில் ஆழ்த்தியது. அவர் பின்பு மசூதிக்கு பாபாவின் தரிசனத்திற்கு வந்தபோது அவரிடம் பாபா, அந்த சோதிடர் டேங்க்லே என்ன கூறுகிறார்? உமக்கு மரணம் வரும் என்று கூறினாரா? அதற்கு நீங்கள் அஞ்சவேண்டியதில்லை. அவரிடம் போய் எப்படி என்னை மரணம் கொல்லுகின்றது என்று பார்க்கின்றேன் என்று தைரியமாக சொல்லுங்கள். என்றார்.

பிறகு மாலை நேரத்தில் திரு. பூட்டி இயற்கை உபாதையை கழிக்கச்சென்றார். அப்போது அங்கு ஒரு பெரிய பாம்பைக் கண்டார். அவரது சேவகன் தடியை எடுத்து வருவதற்குள் அது சட்டென்று அவரது கண்களில் இருந்து ஓடி ஒளிந்தது. அப்போது பாபா காலையில் கூறிய " நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம்" என்ற மொழிகளை நினைவுகூர்ந்து பாபா விற்கு மனதிற்குள் நன்றி கூறினார்.

கோபர்காங் தாலுகாவில் உள்ள கொராலே என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் கமிஷன் ஏஜெண்ட் அமீர்சக்கர். அவர் ஒருமுறை கீழ்வாதத்தால் அவதிப்பட்டார். அது அவருக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது.ஆகவே அவர் தனது தொழிலை விட்டுவிட்டு சீரடிக்கு வந்து தனது நோயில் இருந்து தன்னை விடுவிக்கும்படி பாபாவை வேண்டிக்கொண்டார். பாபா அவரை சாவடியில் தங்கு மாறும், தன்னை வந்து மசூதில் சந்திக்கக்கூடாது என்றும், தாமே உன்னை வந்து பார்த்துக் கொள் வேன் என்றும் கூறி அனுப்பினார்.

சாவடியோ மிகுந்த ஈரம் மிகுந்த இடமாகவும், சுகாதாரம்

அற்றதாகவும், கீழ்வாதம் ஏற்பட்ட நோயாளி தங்குவதற்கு ஏற்றதாகவும் இல்லை. குறிப்பாக சீரடி முழுவதுமே அப்படித்தான் இருந்தது. இதற்கு தனது கிராமமான கொராலே நன்றாக இருந்தது என்று நினைத்தார். ஆனால் பாபாவின் மொழிகளுக்கு கீழ்படிவதுதானே நோய் விழுகுவதற்கு மருந்து. எனவே அமீர்சக்கர் பாபா கூறியபடி சாவடியில் தங்கினார்.

ஆனால் அவருக்கு அங்கே பெரும் நன்மை விளைந்தது. பாபா ஒவ்வொரு நாளும் காலை, மாலை சாவடி வழியாக நடந்து செல்வார். ஒரு நாள் விட்டு ஒருநாள் ஊர்வல மாக வந்து சாவடியிலேயே தங்க ஆரம்பித்தார். ஆகவே அமீர் பாபாவின் அருகாமையிலேயே இருப்பதற்குண்டான பாக்கியத் தைப் பெற்றார். அமீர் அங்கு முழுமையாக ஒன்பது மாதங்கள் தங்கியிருந்தார்.

பின்னர் எப்படியோ அவருக்கு அங்கு தங்குவதில் வெறுப்பு ஏற்பட்டு, ஒருநாள் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அங்கி ருந்து புறப்பட்டு, கோபர்காங் வந்து அங்கு ஒரு தர்மசாலையில் தங்கினார். அப்போது அங்கிருந்த மிகவும் வயதான ஒரு பக்கீர் அவரி டம் சிறிது தண்ணீர் கேட்டார். அங்கு அவரைத்தவிர வேறு யாருமில்லை ஆகவே அமீர் அவருக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தார். முதியவர் அதை வாங்கி குடித்தவுடனே அமீரின் கண்முன்னே மரணம் அடைந்தார்.

அமீர் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டதை உணர்ந்தார். அவர் அதிகாரிகளிடம்



சென்று செய்தியை கூறினால் இவரே மரணத்தை முதலில் பார்த்தவர் என்று பொருப்பை ஏற்க வேண்டும். அதுமட்டுமின்றி இந்த மரணத்தை தான் மட்டுமே அறிந்ததால் தம்மீதே பழிவிழவும் வாய்புண்டு. என்று எண்ணியவறே பாபாவிடம் சொல்லாமல் சீரடியை விட்டு வந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதையும் உணர்ந்தார். எனவே அவர் மீண்டும் சீரடிக்கே திரும்புவது என்று முடிவுசெய்து உடனே சீரடியை நோக்கி நடந்தே புறப்பட்டார்.

வழிநெடுகிலும் பாபாவிடம் மானசீகமாக தான் செய்த தவறை மன்னித்து விடும்படி மன்றாடிக் கொண்டே, சாய்ராம், சாய்ராம் என்றபடியே பொழுது விடிவதற்குள் சீரடிக்கு ஓடியே வந்துவிட்டார். சீரடிக்கு வந்த பின்புதான் அவருக்கு நிம்மதியாக இருந்தது. பின்பு அவர் பாபா வின் வார்த்தைக்கிணங்க சாவடியிலேயே தங்கியிருந்தார். வெகுவிரைவில் நோயில் இருந்தும் குணப்படுத்தப்பட்டார்.

ஒருநாள் நள்ளிரவு, சாவடியில் படுத்துறங்கிய பாபா, " ஓ அப்துல் ஏதோ ஒரு பிசாசு ஐந்து என் படுக்கையில் வந்து மோதுகின்றது"

என்னவென்று பார் என்று சத்தமிட்டார். அப்துல் விளக்குடன் வந்து பாபாவின் படுக்கையை சோதனை செய்தான். ஆனால் அங்கு எதுவும் இல்லை. பாபா அவனை எல்லா இடங்களிலும் நன்றாக பார்க்கும்படி கூறி தனது சட்காவை தரையில் ஓங்கி அடிக்கத்தொடங்கினார்.

பாபாவின் இச்செய்கையை கவனித்த அமீர், ஏதேனும் பாம்பு அங்கே வந்திருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டார். பாபாவுடனான நீண்ட நாள் பழக்கத்தின் காரணமாக பாபாவின் செய்கைகளுக்கு அமீர் அர்த்தத்தை தெரிந்து கொண்டவராக இருந்தார். எனவே அவர் உடனே தனது மெத்தையை அகற்றி சோதிக்க, அங்கே நீண்ட பெரிதொரு பாம்பைக்கண்டு பயந்து போனார். பின்னர் அந்த பாம்பு அடித்துக் கொல்லப்பட்டது. இவ்வாறு பாபா தகுந்த நேரத்தில் எச்சரிக்கை கொடுத்து அமீர்சக்கரை காப்பாற்றினார்.

இதை மறுநாள் கேள்விப்பட்ட முக்தாராம் என்ற பக்தர் என்னிடம் பாம்பை ஏன் கொன்றார்கள். அது வாயில்லா ஜீவன் அல்லவா? அதை பிடித்து காட்டிற்குள் விட்டிருக்கலாம் என்று ஆதங்கப்பட்டார்.

உடனே நான், அது எப்படி பாம்பு போன்ற விஷ ஜந்துக்களை கொல்லாமல் விடுவது.



அதன்மேல் பரிதாபப்பட்டு அதை கொல்லாமல் விட்டு விட்டால் நமது உயிருக்கு ஆபத்தாய் போய்விடும் அல்லவா? எனவே அது அவசியம் கொல்லப்பட வேண்டும் என்று காரசாரன விவாதம் நடந்து எந்தவித முடிவும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது.

மறுநாள் இவ்விவாதம் பாபாவிடம் தெரிவிக்கப்பட்டது. பாபா தனது தீர்மானமான கருத்தைக் கூறினார். தேளானாலும், பாம்பானாலும், கடவுள் எல்லா சீவராசிகளிலும் வசிக்கின்றார். அவரே இவ்வுலகினில் மிகப்பெரிய பொம்மலாட்டக்காரர். அனைத்து சீவராசிகளும் அவரது ஆணைக்கு கீழ்படிகின்றன. அவர் நினைத்தாலொழிய யாரும், எதுவும் பிறருக்கு தீங்கு செய்துவிட முடியாது. இந்த உலகம் முழுவதும் அவரையே சார்ந்திருக்கின்றது. இங்கு எவரும், எதுவும் சுதந்திரமானதல்ல! எனவே நாம் கருணை கூர்ந்து எல்லா சீவராசிகளையும் நேசிக்க வேண்டும். முரட்டுத்தனமான கொலைகள், சண்டைகளை விடுத்து பொறுமையாக இருக்க வேண்டும். கடவுளே அனைவரின் பாதுகாப்பாளர் என்றார்.

ஸ்ரீ சாயியை பணிவோம்!

சகல நன்மைகளையும் பெறுவோம்!

(தொடரும்)

வாசகர் குரல்...

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு: 7 இதழ்: 06 நவம்பர் - 2025 விலை - ரூ.20/-
VOL:7 ISSUE: 06 November - 2025 Rs. 20/-



ஆசிரியர் அய்யா அவர்களுக்கு, இம்மாத புத்தகம் படித்தேன். ரொம்பவும் சந்தோசமாக இருந்தது. எல்லா செய்திகளும் படிக்கப் படிக்க மிகவும் நன்றாக இருக்கின்றது. உங்கள் அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்கள்.

– திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், கோடம்பாக்கம்.

இம்மாத அமுத மொழி புண்பட்ட என் மனதிற்கு ஆறுதலாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. அதில் வந்த மொழிகள் அனைத்தும் உண்மையாக வேண்டும் என்று ஓம் நமோ ஸ்ரீராம் பாபாய நமஹ என்று உச்சரித்துக்கொண்டு

கோடானுகோடி நன்றி!

நம்பிக்கையுடனும், பொருமையுடனும் காத்திருக்கின்றேன். ஞானகுரு, ஸ்ரீராம் பாபாவின் அருளால் நிச்சயமாக விடுதலை கிடைக்கும் என்று நம்புகின்றேன். திரு. சுந்தர்சாயின் திருவருள் தேடி நன்றாக இருந்தது. சாயிநாதரின் அதியங்கள் வியப்பாக இருந்தது. மரணம் பெட்டிச்செய்து அருமை! ஸ்ரீ இரமணகிரி சுவாமிகளின் பிறந்த தேதியில் நானும் பிறந்துள்ளேன். அவரது தரிசனத்தை எங்களுக்கு வழங்கிய ஆசிரியரும், எனது குருநாதருமாகிய யோகி ஸ்ரீராம் பாபாவுக்கு மனமார்ந்த நன்றி!

– திருமதி. இந்துமதி, அயனாவரம்.

ஆசிரியர் திரு. வே. ஸ்ரீராம் அவர்கள் எழுதும் சாய் சரிதம் படிப்பதற்கு எளிதாகவும், புரியும்படியும் இருக்கின்றது வாழ்த்துக்கள். சர்க்கரையை கட்டுக்குள் வைக்கும் சங்குப்பூ கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மிக்க நன்றி!

– திருமதி. பாலாம்பிகா, பேரம்பாக்கம்.

விடுதலை பெட்டிச்செய்தியில், "நம்மால் ஒரு மரத்தில் இருந்து பறித்த ஒரு இலையைக்கூட மீண்டும் அதன் இடத்தில் ஒட்ட வைக்க முடியாது" என்ற வாக்கியம் என்னை சிந்திக்க வைத்தது. அதேபோல் குருவின் துணையிருந்தால் "அகந்தை பக்தியாகி, பக்தி

யோகமாகி, யோகம் ஞானமாகி, பிறவிச்சூழலில் இருந்து விடுதலை கிட்டும் என்ற வரிகள் என்னை குருவைத்தேட வைக்கின்றன. மிகவும் நன்றி அய்யா.

– திரு. கதிரவன் சாய், திருநெல்வேலி.

பகவான் இரமண மகரிஷியின் சீடர் இரமணகிரி சுவாமிகள் பற்றிய கட்டுரை அற்புதம். அதே வேளை சுவாமிகளைப் பற்றி அறிந்தபோது மிகவும் வியப்பாக இருந்தது. ஏன் என்றால் நான் நாற்பது ஆண்டுகாலம் பிறந்து வாழ்ந்த எனது ஊரின் அருகில் இருந்தும் இதுவரை நான் இரமணகிரி சுவாமிகள் சீவபீடத்திற்கு சென்றதில்லை. சுவாமிகளை எங்களுக்கு புத்தகத்தின் மூலம் அறிமுகப்படுத்திய யோகி ஸ்ரீராம் பாபா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகள்!

– திரு. பத்மநாபன், சோழவந்தான்.

மரணம் பெட்டிச்செய்தி எனக்குள்ளாக இருந்த பல கேள்விகளுக்கும், பயத்திற்கு விளக்கமாக இருந்தது. கட்டுரை சிறியதாயினும், செய்தி மிகப்பெரியது. நன்றி அய்யா.

– திருமதி.மலர்விழி, சென்னை.

திரு. நாராயணன் அவர்கள் எழுதும் தொடர் வாழ்வியல் நெறி காட்டும் மெய்ஞானம் மிகச்சிறப்பு. அற்புதம். வாழ்த்துக்கள். ஆசிரியரின் இனிய மொழிகள் ஆழ்ந்த மெய் ஞானத்தின் எளிய விளக்கமாக அமைந்திருக்கின்றன. அருமை. மூட நம்பிக்கையை வளர்க்காத மெய் ஞானச்செய்திகளைத் தருவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

– திரு. புலவர் சக்திவேல், தஞ்சாவூர்.

பெட்டிச்செய்திகளும், அமுத மொழியும் எனக்கு மிகவும் பிடித்தவைகள். மற்ற அனைத்துக் கட்டுரைகளும் நன்றாக இருக்கின்றன. பெட்டிச் செய்திகளை இன்னும் அதிகம் வெளியிட்டால் நன்றாக இருக்கும். நன்றி!

– திரு. ரமேஷ் ராகவேந்திரன், விழுப்புரம்.

சாய் சங்கமம் கட்டுரையைப் படித்ததும் என்னால் கலந்து கொள்ள முடியவில்லையே என்ற வருத்தம் உண்டானது. ஆயினும் கட்டுரையின் மூலம் சாய் சங்கமத்தில் கலந்து கொண்டதைப் போன்று உணர்ந்தேன். நமது சாயி பகவானுக்காக இது போன்ற இன்னும் பல நிகழ்ச்சிகளை நடக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

– திரு. பாலசுப்பிரமணியன், பல்லாவரம்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 99418 16692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: **9941816692**

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி. திலகா ஷ்யாம் சுந்தர், புலுதிவாக்கம். ரூ.3500.
திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.
திரு. பார்த்திபன் சாரதா குடும்பத்தார், சென்னை. ரூ.1500.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி.பி. மகாலட்சுமி, மதுரை. ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திரு. ஸ்ரீஹரி, போடிநாயக்கனூர், ரூ.1000.

திரு. முரளி, ராயப்பேட்டை, ரூ.1000.

திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி, AYK, ரூ.500.

திருமதி.ஜஸ்வர்யா பாண்டியராஜன் குடும்பத்தார், தாம்பரம். ரூ.500.

திருமதி.சுசீலா, அயனாவரம். ரூ.500.

திரு. சத்யமூர்த்தி, அம்பத்தூர். ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு. இராஜபாண்டியன், டி.கல்லுப்பட்டி.ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.

திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.

திருமதி. வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.

திருமதி.சாந்தி பார்த்தசாரதி, பட்டாபிராம். ரூ.300.

திருமதி. இந்திரா வெங்கட்ராமன், பெங்களூர். ரூ.200.

திருமணி. உமாதேவி, அயனாவரம்.ரூ.200.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.200

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திரு. நித்யானந்தம், ஒரகடம். ரூ.200.

திரு. வா.சூரியகுமார் கேபிள் TV. மாவுத்தன்பட்டி, ரூ.150.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி.லதா, அயனாவரம்.ரூ.100

திரு. செல்வவிநாயகம். மணலி. ரூ.100.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.

திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.100

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** - **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** - **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** - **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** - **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை - 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068